Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா   செய்தி : 021 493 0000   விளம்பரம் : 021 493 1111

சுடர் :35   கதிர் :64   தை 17ஆம் நாள்   வெள்ளிக்கிழமை   31 ஜனவரி 2020   வள்ளுவர் ஆண்டு 2051

## ஆளும் கட்சிக்குள் மோதல் அந்தரத்தில் அதிகாரிகள்

*நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பெரும் சிரமம்*

யாழ்ப்பாணம், ஜன. 31

ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யாழ்ப்பாண மாவட்ட அரசியல்வாதிகளுக்கு இடையிலான பனிப்போர் காரணமாக, அதிகாரிகள் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் திணறுகின்றனர். பயனாளிகள் தெரிவு உள்ளிட்ட சகல விவகாரங்களிலும், ஆளும் கட்சி அரசியல்வாதிகள் மூக்கை நுழைப்பதால் சுயமாகச் செயற்பட முடியாத நிலைமை காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் 23



## சுதந்திர தினத்தில் சிங்களத்தில் தேசிய கீதம்

அரசு உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, ஜன. 31

இலங்கையின் சுதந்திர நாளில் சிங்கள மொழியில் மட்டுமே தேசியகீதம் இசைக்கப்படும் என்று அரசு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. .

இலங்கையின் 72ஆவது சுதந்திர நாள் பெப்ரவரி 4ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் கொண்டாடப்படவுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

சுதந்திர நாள் நிகழ் 23

# ஒருங்கிணைப்புக் கூட்டம்; கூட்டமைப்பு புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 31

கோத்தாபய ராஜபக்ஷ அரசு பதவியேற்ற பின்னர் முதன் முறையாக இடம்பெறும் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை புறக்கணிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இன்றைய கூட்டத்தில் பங்கேற்கமாட்டார்கள். இருப்பினும் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் கலந்து கொள்வார்கள். 23

## சஜித் தலைமையில் புதிய கூட்டணி?

*விரைவில் அறிவிப்பு எனத் தகவல்*

கொழும்பு, ஜன. 31

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை விட்டுக் கொடுக்காத தீர்மானத்தை ரணில் எடுத்துள்ள நிலையிலும் - கட்சியின் செயற்குழுவும் ரணில் கட்சித் தலைவராக தொடர அனு 07

## பெருவீதிகளின் அபிவிருத்தி: மீண்டும் கிடப்பில்!

*சீனாவிடமிருந்து இந்தியா பறித்தெடுத்த பின்னர் இந்த நிலமை*

கொழும்பு, ஜன. 31

யாழ்ப்பாணம் மானிப்பாய் காரைநகர், வழுக்கையாறு புங்குடுதீவு குறிகாட்டுவான், யாழ்ப்பாணம் பொன்னாலை பருத்தித்துறை ஆகிய பெரு வீதிகளின் மறுசீரமைப்புப் பணிகள் இந்தியாவுக்கு வழங்கப்பட்ட பின்னர் அவை கைவிடப்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 23

## ரணில்தான் தலைவராம்

*பிரதமர் வேட்பாளர் சஜித்; மத்திய செயற்குழு அங்கீகாரம்*

கொழும்பு, ஜன. 31

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தலைமைத்துவப் பிரச்சினை பேரிடியாக இருந்து வந்துள்ள நிலையில் அந்தக் கட்சியின் தலைவராக ரணில் 07

### முச்சந்தி முரளி



“மூக்கிருக்கிற மட்டும் சளி இருக்கிற மாதிரி ரணில் இருக்கும் மட்டும் இந்த அடிபாடு நீக்காது பாருங்கோ...”

## சங்கரி கையில் சுரேஸின் குடுமி

யாழ்ப்பாணம், ஜன. 31

ஈ.பீ.ஆர்.எல்.எவ் கட்சியின் பெயரை தமிழர் ஐக்கிய முன்னணி எனப் பெயர் மாற்றுவதில் தங்களுக்கு ஏதும் ஆட்சேபனையுண்டா என ஆனந்தசங்கரியிடம் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய கோரி 23

## தமிழர்களுக்குத் தீர்வை பிக்குகள் பெற்றுத் தருவர்



விரிவு பக்கம் 19

## அச்சுவேலியில் படைப்புழு

விரிவு பக்.21

## பிரிகிறது பிரிட்டன்

லண்டன், ஜன. 31

நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து இன்று நள்ளிரவுடன் பிரிந்து செல்கின்றது பிரிட்டன். 23




உங்கள் சம்பளத்தில் அதிக வேலைகளைச் செய்வதற்கு, அனைவருக்கும் ஏற்ற DFCC வங்கியின் செலரி பார்ட்னர் கணக்கை இன்றே ஆரம்பியுங்கள்.

- சம்பளத்தைப் போல இருமடங்கு OD வசதி
- கவர்ச்சிகரமான வட்டி வீதம்
- இலவச டிஜிட்டல் வங்கிச் சேவைகள்
- இணையும் கட்டணம் மற்றும் வருடாந்தக் கட்டணம் அற்ற கிரடிட் கார்ட்
- DFCC அல்லது LankaPay ATM வலையமைப்பிலிருந்து இலவசமாக பணம் மீளப்பெறுதல்
- நடைமுறைக் கணக்கிற்கு ஆரம்ப வைப்பு அவசியமில்லை

DFCC செலரி பார்ட்னர்

*நிபந்தனைகளுக்குட்பட்டது

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# பயிர் செய்யாத நிலங்களை பிறருக்குக் கொடுக்க முடிவு

## பதிவுசெய்யுமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 30

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில், விவசாயச் செய்கை மேற்கொள்ளப்படாத விளைநிலங்களை விவசாயச் செய்கை மேற்கொள்ள ஆர்வமுடையோருக்கு நிபந்தனை அடிப்படையில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, தொடர்ச்சியாக 3 ஆண்டுகளாக நெற்செய்கை மேற்கொள்ளாத காணி உரிமையாளர்கள் இந்த வருடம் செய்கையில் ஈடுபட விரும்பின் காணி அமைந்துள்ள கிராம அலுவலரிடமும் விவசாய சம்மேளனத்திலும் வரும் சித்திரை மாதத்துக்கு முன்னர் உறுதிப்படுத்தவேண்டும்.

உறுதிப்படுத்தாத விளைநிலங்கள் கிராம அலுவலர்களின் சிபார்சுடன் விவசாய சம்மேளனத்தின் நிபந்தனை அடிப்படையில் நெற்செய்கைக்காக பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்று வேலணைப் பிரதேச செயலர் அ.சோதிநாதன் தெரிவித்தார்.

வேலணைப் பிரதேச உணவு உற்பத்தி தொடர்பிலும் டெங்கு பற்றியதுமான விசேட கூட்டம் சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்றது. அதில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் தற்போது 2 ஆயிரத்து 915 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இதில் கடந்த 5 ஆண்டுகளுக்கு முதல்வரை வெறுமனே 445 ஏக்கர் நிலத்தில் மட்டுமே செய்கை இடம்பெற்று வந்துள்ளது. பெருமுயற்சியின் பின்னர் கடந்த ஆண்டு ஆயிரத்து 75 ஏக்கர் நிலத்தில் விதைப்பு இடம்பெற்றது.

எனினும், மேலும் ஆயிரத்து 841 ஏக்கர் நிலம் செய்கை மேற்கொள்ளப்படாமல் உள்ளது. இதனால் பிரதேச உணவு உற்பத்தியைக் கருத்தில்கொண்டே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. தவிர, வேலணைப் பகுதியில் தற்போது வசிக்கும் பொதுமக்களின் சுகாதார பாதுகாப்பு மற்றும் சமூக பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு குடியிருப்புக் காணிகளைக் கொண்ட காணி உரிமையாளர்கள் தங்கள் காணிகளைத் துப்புரவு செய்யவேண்டும். அந்தக் காணிகளை எல்லையிட்டுப் பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள் என்றும் பிரதேச செயலர் அறிவுறுத்தியுள்ளார்.

(த-105)

# உயிர் இருக்கும் வரை தமிழர்களுக்குச் சேவை

## முன்னாள் ஆளுநர் ராகவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

எனக்கு இருப்பது ஓர் உயிர், ஓர் ஆன்மா, ஓர் உடல். எனது உயிர் இருக்கும் வரையில் தமிழர்களுக்கு எந்த விதத்திலும் சேவை செய்யத் தயாராக இருக்கின்றேன்

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இந்து பௌத்த கலாசார பேரவை மற்றும் வடக்கு மாகாண தேசிய இரண்டாம் மொழிக் கற்கை நிலையம் என்பன இணைந்து நடத்திய, சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்று மதியம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு இந்த நிகழ்வுக்கு வரும்போது வடக்கு மாகாண ஆளுநர். இப்போது முன்னாள் ஆளுநர். நாம் வடக்கு மாகாண நிர்வாகத்தை முன்மாதிரியான நிர்வாகமாக காட்டியுள்ளோம். எனக்குப் பின்னால் சிறந்த ஆளுநர் என்ற பட்டம் இருக்கின்றது. இதற்குக் காரணம் இங்குள்ள அதிகாரிகள்தான். தென்னிலங்கைக்கும், தமிழர் தேசத்துக்கும் இடையில் சிறந்த உறவுப் பாலம் இல்லை. துரதிஷ்டவசமாக இலங்கை பின்னடைவைச் சந்திப்பதற்கு இதுதான் காரணம்.

கல்வியில் வடக்கு மாகாணத்தை இலங்கையின் முதன்மை மாகாணமாக மாற்றவேண்டும். கல்வி அமைச்சின் செயலர் இளங்கோ ஓய்வு பெறுவதற்கு இதனைச் செய்ய வேண்டும். கல்வியிலே தமிழர்கள் வீழ்ந்து போக மாட்டோம். விழவிழ பீனிக்ஸ் பறவைபோன்று எழுவோம்.

அரசியலுக்கு வரப் போகின்றீர்களா? மீண்டும் ஆளுநராக வரப் போகின்றீர்களா? என்று பலர் கேட்கின்றார்கள். எனக்கு இருப்பது ஓர் உயிர், ஓர் ஆன்மா, ஓர் உடல்.

எனது உயிர் இருக்கும் வரையில் தமிழர்களுக்கு எந்த விதத்திலும் சேவை செய்யத் தயாராக இருக்கின்றேன். இதுதான் நான் அவர்களுக்கு சொல்லக் கூடிய பதில் - என்றார்.

(ஒ.5)

# கண்டெடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 30

கடந்த 22ஆம் திகதி கீரிமலை யாழ்ப்பாணம் 768 சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் சிற்றூர்தியிலிருந்து பயணி ஒருவரால் தவறவிடப்பட்ட நகை கண்டெடுக்கப்பட்டுள்ளது. கீரிமலையிலுள்ள சிற்றூர்திச் சேவை சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நகையைத் தவறவிட்டவர் உரிய ஆதாரம் காட்டி அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ.5)

# இல்ல மெய்வன்மை

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் இன்று இடம்பெறவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 1 மணியளவில் நடைபெறும் இந்த இல்லமெய்வன்மைப் போட்டிக்கு கல்லூரியின் கொழும்புக் கிளைபழைய மாணவர்கள் அமைப்பின் தலைவர் எஸ்.மகேந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் விளையாட்டுத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். பார்த்தீபன், கௌரவ விருந்தினராக கட்டட ஒப்பந்ததாரன் கே.வசீகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ம)

# ரயிலில் மோதுண்டு பசு சிதைந்து சாவு!

வவுனியா, ஜன.30

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயிலுடன் மோதி பசுமாடு ஒன்று நேற்று உயிரிழந்தது.

ரயில் வவுனியா ரயில் நிலையத்துக்கு வந்தபோது இந்த விபத்து இடம்பெற்றது. இதையடுத்து புகையிரதம் நிறுத்தப்பட்டு உயிரிழந்த பசுமாடு ரயில் கடவையிலிருந்து அகற்றப்பட்டு சற்று நேரத்தின் பின்னர் யாழ் நோக்கி ரயில் பயணித்தது.

(ம-110)

# மாலைதீவில் கைதான இளைஞர்கள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

மாலைதீவுக் கடற் பிரதேசத்தில் வைத்து 2007ஆம் ஆண்டு சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த மூன்று இளைஞர்களும் தண்டனை நிறைவுற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவர் தொடர்பில், அந்த நாட்டுப் பொலிஸார் மாலைதீவு நீதிமன்றில் வழக்குத் தொடுத்தனர். மூவரையும் குற்றவாளிகள் எனவும், அதற்காக 15 ஆண்டுகாலச் சிறைத் தண்டனை வழங்குவதாகவும் அந்த நாட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தது. கைதிகள் தண்டனையை இலங்கை சிறையில் அனுபவிக்கலாம் என்ற உத்தரவில் இலங்கை அரசிடம் உத்தியோக பூர்வமாக அவர்கள் கையளிக்கப்பட்டிருந்தனர்.

அதன் பின்னர் கைதிகள் தொடர்பில் தீர்வை வழங்கக் கோரி கைதிகளின் உறவுகள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதனை நாடியிருந்தனர். `நாடாளுமன்ற உறுப்பினர் சட்டமா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

அதன் பிரகாரம் 2007ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக சிறையில் இருந்த மூன்று இளைஞர்களினதும் 15 ஆண்டுகளுக்கான காலம் எப்போது முடிவடைகின்றது என்பதோ அல்லது என்ன அடிப்படையில் இலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதோ கண்டறிய முடியாதவாறு வழக்கு உள்ளிட்ட அனைத்து விடயங்களும் மாலே மொழியில் இருந்தது.

அதனால் மாலே மொழியை மொழிபெயர்ப்பதற்காக 2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி சிறைச்சாலைகள் அமைச்சரின் கவனத்துக்கு விடயம் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து விடயம் கோவை வெளிவிவகார அமைச்சுக்குப் பாரப்படுத்தப்பட்டது. சிறைச்சாலை அமைச்சினால் பாரப்படுத்தப்பட்ட கோவை மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டது. .

இந்த நிலையில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் கடந்தும் கைதியாக இருந்த மூவரும் தற்காலிகமாகப் பிணையில் வெளிவந்தனர். கைதி ஒருவருக்குத் திருமணமும் நடைபெற்றது. இந்த நிலையில் குறித்த 3 கைதிகளும் தண்டனைக் காலம் நிறைவுற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

(க105)

# ஜனாதிபதி செயலணிக்கு கலாநிதி சிவகுமார்



யாழ்ப்பாணம், ஜன. 30

தேசிய வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுப்பிரமணியம் சிவகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முல்லைத்தீவு நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளராக, வடக்கு விவசாய அமைச்சின் உதவிப் பணிப்பாளராக, வடக்கின் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (என்ரிப்) திட்டப் பணிப்பாளராக பொறுப்புக்களை வகித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-214)

# சூத்திரதாரிகளை கண்டறியுங்கள்

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை



**கொழும்பு, ஜன.31**
**ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள அனைவரையும் மக்களின் நன்மை கருதி ஜனாதிபதி ஆணைக்குழு வெளிக் கொண்டு வர வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கேட்டுக் கொண்டார்.**

நீர் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நான் ஜனாதிபதி தலைமையிலான அரசிடம் விசேட வேண்டுகோள் ஒன்றை முன்வைக்கிறேன். இன, மத, மொழி பேதங்களைக் கடந்து, அரசியல் கட்சி பேதங்களைக் கடந்து செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறே தொடர்ச்சியாக பிளவுபட்டு நாம் செயற்பட்டு வந்தால், இந்த நாட்டை எவ்வாறு ஐக்கியப்படுத்துவது?

அதேபோல், ஈஸ்டர் தாக்குதல்களுக்கு பிரதான காரணகர்த்தாக்கள் யார் என்பதை ஜனாதிபதி ஆணைக் குழுவின் ஊடாக அறிவிக்க வேண்டும் என்றும் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

இதன் பின்னணியில் உள்ளவர்கள், குண்டைத் தயாரித்தவர்கள், இதற்கான ஊக்கத்தை வழங்கியவர்கள் என அனைவரது கைகளிலும் இரத்தம் படிந்துள்ளது. இந்த சம்பவத்தை தடுத்து நிறுத்தக் கூடிய சூழ்நிலை கிடைத்தும், அதனை மேற்கொள்ளாதவர்கள் யார் யார் என்பதைக் கண்டறிந்து தண்டிக்க வேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழு மக்களுக்கான இதன் உண்மைகள் அனைத்தையும் வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (எ)

## கொரோனாவை எதிர்கொள்வது பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வது தொடர்பிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

குடாநாட்டிலுள்ள முக்கிய மருத்துவமனைப் பணிப்பாளர்களும் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மற்றும் விஷேட மருத்துவக் குழுவினரும் யாழ்ப்பாண விமான நிலைய மருத்துவர்களும் இதில் கலந்துகொண்டனர்.

சீனாவில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று அபாயம் காரணமாக உலகின் பல பகுதிகளிலும் அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் வடக்கில் தொற்று ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ளக் கூடிய மருத்துவமனையாக மத்திய சுகாதார அமைச்சு யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையைப் பெயரிட்டுள்ளது.

இதற்காக தயார் செய்யப்பட்ட விஷேட மருத்துவக் குழு எந்தநேரமும் தயார் நிலையில் இருக்கும். சந்தேகத்துக்கிடமான நோயாளி இனம் காணப்பட்டால் அவரை விசேட மருந்துவக் குழு பரிசோதனைக்கு உட்படுத்தும். அவருடைய குருதி மாதிரியை எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பி உச்சபட்சமாக 48 மணித்தியாலங்களுக்குள் உறுதியான முடிவைப் பெற்றுக்கொள்ள முடியும். இதனால் சகல மருத்துவமனைப் பணிப்பாளர்களும் எந்த நேரத்திலும் எம்மை நாடமுடியும் என்று அறிவுறுத்தியுள்ளோம். என்று போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (த105)



## கூட்டுறவுச் சங்கம் புதிய கட்டடத்தில்

புதுக்குடியிருப்பு.ஜன.31

புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகம் புதிய கட்டடத்தில் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

சங்கத் தலைவர் வ.அன்னலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,கூட்டுறவு சங்க பதிவாளருமான போ.வாகீசன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.சிங்கநாதன்.ஓய்வு நிலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உ.சுபசிங்க.புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் உள்ளிட்ட பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர். (ஜ19)

## சுதந்திர தினத்தில் 6,008 முப்படையினர்

கொழும்பு, ஜன. 31

இலங்கையில் 72ஆவது சுதந்திர தினம் பெப்ரவரி 4ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் கொண்டாடப்படவுள்ளது.

ஜனாதிபதி,பிரதமர், சபாநாயகர், பிரதம நீதியரசர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிறப்பு அதிதிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் என 2 ஆயிரத்து 500 பிரமுகர்கள் நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

பொதுமக்கள் தரப்பில் ஆயிரம் பேர் கலந்துகொள்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அணிவகுப்பு மரியாதையில் 4 ஆயிரத்து 325 இராணுவத்தினரும், 868 கடற்படையினரும், 815விமானப்படையினரும், ஆயிரத்து 382 பொலிஸாரும், சிவில் பாதுகாப்பு படையினர் 515 பேரும், தேசிய மாணவர் படையணியில் இருந்து 355 பேரும் பங்கேற்கவுள்ளனர். கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அதேவேளை, சுதந்திர தினத்தை முன்னிட்டு அரச நிறுவனங்களில் பெப்ரவரி முதலாம் திகதி முதல் 7ஆம் திகதிவரை தேசியகொடி ஏற்றப்பட வேண்டும். அதேபோல் சுதந்திர தினத்தை முன்னிட்டு மேலும் பல நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-44)

## மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்.ஜன.31

உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

கல்லூரி அதிபர் திருமதி ஜெபமோக் அனித்தா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், கௌர விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் ஆகியோர் கலந்து கொள்வர்.

+++

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் மற்றும் திருமதி நந்தினி உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.(க-50)

## விபத்தில் சிறுவன் காயம்

காரும், சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் பயணித்த 13 வயதுச் சிறுவன் ஒருவன் காயமடைந்துள்ளான். காயமடைந்த சிறுவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

இந்த விபத்து யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ)

நல்லூர் ஸ்ரீ கைலாசநாதர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோயில் மூன்றாம் கைலாசம்

விசேட அறிவித்தல்

நாளை (01.02.2020) சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் கோயில் வெளி மண்டபத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற உள்ளதாக இனந்தெரியாத நபர்களால் அறிவித்தல் ஒன்று ஆலய மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த அறிவித்தலுக்கும் ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளரான ஆலய தர்மகர்த்தாவிற்கோ ஆலய நிர்வாக சபைக்கோ எதுவிததொடர்பும் இல்லை என்பதை அறியத்தருகின்றேன்.

பிரம்மஸ்ரீ கு. ஆனந்தகுருசாமிசர்மா
மேற்படி ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளரும் தர்மகர்த்தாவும் நிர்வாகசபையினரும்.

# வலி. தென்மேற்குப் பிரிவில் மாணவர்களுக்கு மாங்கன்றுகள்

**ST.JOHN'S COLLEGE, JAFFNA**

**Annual Inter-House Athletic Meet**

*on*

**Saturday 1st February 2020**
**at 8.30 a.m.**

*Chief Guest:*

**Mr.S.Sutharsan**
*Divisional Secretary,*
*Divisional Secretariat, Jaffna.*

*&*

**Mrs. Pathmapiriya Sutharsan**
*Teacher, Jaffna Hindu Ladies' College*

*All are cordially invited*

Principal, Staff & Students
St.John's College, Jaffna.

வலி.தென்மேற்கு. ஜன. 31

வலி. தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மாங்கன்றுகள் வழங்க முன்வந்துள்ள பிரதேசசபை, சுமார் 3 இலட்சம் ரூபாவுக்கு சுமார் ஆயிரம் மரக்கன்றுகளை கொள்வனவு செய்துள்ளது.

இந்த மரக்கன்றுகள் பாடசாலைகளில் வைத்து வழங்குவதற்கான ஒழுங்குகளை தவிசாளர் அ.ஜெபநேசன் மேற்கொண்டுள்ளார்.

சிறு பிராயத்திலிருந்தே மாணவர் மத்தியில் மரநடுகையை ஊக்குவிக்கும் வகையிலும் உடல் ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவி க்காத மருந்து பயன்படுத்தாத மாம்பழங்கள் எதிர்காலச் சந்ததியினருக்கக் கிடைக்கும் வகையில் இந்தத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள 40 பாடசாலைகளில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் சுமார் ஆயிரம் மாணவர்களுக்கு மாங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

விரைவாகப் பூத்துக் காய்க்க்கூடிய இந்த மாங்கன்றுகள் ஒவ்வொன்றம் 300 ரூபா பெறுமதியானது என்று தவிசாளர் தெரிவித்துள்ளார்.

இந்த மரங்களிலிருந்து பயன் பெறக்கூடிய வகையில் இவற்றைப் பாதுகாத்து வளர்க்கவேண்டுமென்று மாணவர்களைக் கோரியுள்ளார்.

தற்போது பாடசாலை மாணவர்கள் பற்றிய விவரங்களைத் தெரிட்டுவதில் பிரதேசசபை ஈடுபட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(கு-115)

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக உறுப்பினர்களான
**யதுர்சன், அஜித்தன்**
ஆகியோரின் அன்புத்தாயார்
**அமரர் (திருமதி)**
**சறோஜினிதேவி விஜயரட்ணம்**

அவர்கள் காலமான செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சம்பியன்லேன்,
கொக்குவில் கிழக்கு.

நிர்வாகத்தினர்.
**வளர்மதி முன்னேற்றக்கழகமும்,**
**சனசமூக நிலையமும்.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 01 . 1950 | 30 . 01 . 2020 |



**திருமதி சற்குணபாலதேவி தணிகாசலம்**

புதுறோட், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சற்குணபாலதேவி தணிகாசலம் நேற்று (30.01.2020) வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தணிகாசலம் அவர்களின் அன்பு மனைவியாரும் காலஞ்சென்றவர்களான நாகநாதர் கந்தையா (சின்னத்துரை), கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும் Dr.மயூரனின் (போதனாவைத்தியசாலை - யாழ்ப்பாணம்) அன்புத்தாயாரும் Dr.நந்தினியின் (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) பாசமிகு மாமியாரும் திருமதி வைத்திலிங்கம் பரமேஸ்வரி (நளினி - குடும்பநல உத்தியோகத்தர் ஆதார வைத்தியசாலை ஊர்காவற்றுறை), பேராசிரியர் அருந்தவராஜா (கோபி - யாழ்பல்கலைக்கழகம் - வரலாற்றுத்துறை) ஆகியோரின் அன்புச்சகோதரியும் அட்சரன், ஆருத்திரா, அபிநயன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் வைத்தியலிங்கம், அனுஷா (சமூகசேவை உத்தியோகத்தர் - வேலனை பிரதேசசெயலகம்) ஆகியோரின் மைத்துனியும் அகஸ்திகாவின் பாசமிகு பெரியதாயாரும் அபிமன், அஞ்சலா, அஸ்வினி, ஆரோகணா ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2020) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 4.00 மணியளவில் யாழ். வண்ணை கோம்பயைன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:- த.மயூரன் (மகன்)**

**077 990 7000 (மயூரன்) , 0774180512 (கோபி)**

# ஐ.தே.கவின் செயற்குழு புதன்கிழமை

கொழும்பு. ஜன. 31

ஐ.தே.கவுக்குள் மோதல்கள், முரண்பாடுகள் உச்சம்தொட்டுள்ள நிலையில் ஐ.தே. கவின் செயற்குழு எதிர்வரும் புதன்கிழமை கூடவுள்ளது. தீர்மான மிக்க கூட்டமாக இது அமையும் என்று கருதப்படுகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுக் கூட்டம் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று பிற்பகல் சிறிகொத்தாவில் கூடியது. செயற்குழுவுக்கு இதுவரையில் பெயரிடப்பட்டுள்ள 59 பேரில் 37 பேர் மட்டுமே கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர். 22 பேர் சமூகமளிக்கவில்லை. கட்சியின் செயற்குழுவிலிருந்து சரத் பொன்சேகா, அஜித் பி. பெரேரா, ரோஸி சேனாநாயக்க, இம்தியாஸ் பாகிர் மாகார் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளதற்கு எதிர்ப்பை வெளியிடும் வகையிலேயே சஜித் ஆதரவு உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், சஜித் அணியால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள், பொதுத்தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் செயற்குழு கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

குறிப்பாக செயற்குழுவிலிருந்து எந்தவொரு உறுப்பினரும் நீக்கப்படக்கூடாது என்றும், ஐக்கிய தேசியக்கட்சியாகவே பொதுத்தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்றும் மங்கள சமரவீர யோசனை முன்வைத்தார். அத்துடன், கட்சி தலைவர் பதவியில் ரணில் விக்கிரமசிங்கவே நீடிக்க வேண்டும் எனவும், கூட்டணியின் தலைவர் பதவியை சஜித்துக்கு வழங்கி அவரை பிரதமர் வேட்பாளராக களமிறக்க வேண்டும் எனவும் கருத்து வெளியிட்டார். அதன்பின்னர் ஏனைய உறுப்பினர்களும் தத்தமது வாதப்பிரதிவாதங்களை முன்வைத்தனர்.

கூட்டத்தின் இறுதியில், ஐக்கிய தேசியக்கட்சி தலைமையில் அமையும் கூட்டணியின் தலைமைப்பதவியை சஜித்துக்கு வழங்குவதற்கும், வேட்பு மனு குழுவின் தலைவராகவும் அவர் செயற்படுவதற்கும் செயற்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போது எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகிக்கும் அவரை பிரதமர் வேட்பாளராக போட்டியிட வைப்பதற்கும் இணக்கம் வெளியிடப்பட்டது

ஆனால், சஜித் தலைமையில் அமையும் கூட்டணியின் பொதுச்செயலாளர் பதவியை விட்டுக்கொடுப்பதற்கு ரணில் தரப்பு பச்சைக்கொடி காட்ட மறுத்துள்ளது. எனினும், செயலாளர் பதவியும் தமது தரப்புக்கே வேண்டும் என சஜித் அணி அடம்பிடித்துவருவதால் இருதரப்பும் இணக்கப்பாட்டுக்குவருவதில் தடை ஏற்பட்டுள்ளது. இந்தப் பரபரப்பான நிலையில் எதிர்வரும் புதன்கிழமை செயற்குழு கூடவுள்ளது. (ம-44,22)

## அன்பு வெளியீடு

**தரம்: 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் 2020**
ஆசிரியர் **வே.அன்பழகன்** அவர்களின்
**தரம்: 5 மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் வெளிவருகின்றன**
**தனியார் கல்வி நிலையங்கள், பாடசாலைகள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.**

**அன்பொளி கல்வி நிலையம்**
**தபாற்கந்தோர் வீதி,**
**சாவகச்சேரி.**

**அன்பொளி கல்வியகம்**
**இந்துக்கல்லூரி வீதி,**
**யாழப்பாணம்.**

(cs.30923) (13.17)

## மரண அறிவித்தல்

**திருமதி அம்புஜராணி குணரட்ணம்**



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை அண்ணாம்லை வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணரட்ணராஜா அம்புஜராணி அவர்கள் 29.01.2020 புதன்கிழமை காலமானார்.

அன்னார் குணரட்ணராஜாவின் அன்பு மனைவியும் சுயந்தன், சுயாழினி, சுவீதா, சுகிர்தன், சுயனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாதுஷா, முகுந்தன், கஜீபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தஷ்மியன், சாதனா, மிதேஸ், டிவன்ஜா, தஷானா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2020) வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 767 9824** **தகவல்: குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்கள்



பிறப்பு 08 ... 12 ... 1960

இறப்பு 30 ... 01 ... 2020

## செல்வி சிவப்பிரகாசம் நடனாம்பாள்

காரைநகர் ஆயிலியை பிறப்பிடமாகவும், வவுனியா குளோப்மில் வீதி, பண்டாரி குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவப்பிரகாசம் நடனாம்பாள் நேற்று **(30.01.2020)** வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி சிவப்பிரகாசம் மற்றும் சௌபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் சோதியாம்பாள், கோகுலராசா, பரமராசா, நந்தினி ஆகியோரின் அன்பு சகோதரியும் பரஞ்சோதி, உமாதேவி, சியாமளா, சந்திரேஸ்வரன், ஆகியோரின் அன்பு மைத்துனியும் சோதிகரன்- சகிலா, ஸர்வர்ணசோதி- மதனரூபன், மாதங்கி, கஜன், சாருஜன், ஆரணி ஆகியோரின் அன்பு சிறிய தாயும் அனுஷா - பரமசிவம், பிரதீப் - தனுசியா, பிரகாஸ், அபிராமி, லக்ஷ்மி, ஈஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கோகுலன், வைஸ்ணவி, அட்சரண், ஆருத்திரா, பிரயூன், பிரவீன், பிரணவி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(31.01.2020)** வெள்ளிக்கிழமை முற்பகல் **10**மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் **12** மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆயிலி, காரைநகர்.** **தகவல்: குடும்பத்தினர்**

**கோகுலராஜா- (076 408 9455), சோதியாம்பாள்- (077 449 2249)**
**சந்திரேஸ்வரன்- (64796 00533), உமாதேவி- (416 332 0994)**

# மரண அறிவித்தல்கள்



## தங்கராஜா அன்பானந்தன்

(முன்னாள் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், நிறைவேற்று அதிகாரி, பல்கலைக்கழக கல்லூரி, பொதுமுகாமையாளர் - உதயன் பத்திரிகை, Dean of academic affairs - BLC Campus, செயலாளர்-லயன்ஸ் கழகம், யாழ்ப்பாணம்)

ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், 16/1, ஐயனார் கோயில் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா அன்பானந்தன் நேற்று (30.01.2020) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் நாகரெத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான இலட்சுமணன் - நித்தியலெட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமக னும், பற்குணதேவியின் (உருத்திரா) அன்புக் கணவரும், குகனேஸ்வரி, உதயேஸ்வரி (பிரான்ஸ்), சுரேந்திரன் (வவுனியா), தயாபரேஸ்வரி (பிரான்ஸ்) சத்தியசீலன் (நியூசிலாந்து), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சம்யுதா (லண்டன்), சாம்பவி (பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாக அலுவலகம், வடமாகாணம்), சுவேநிதன் ( CDB - Bank), பவித்ரா (மாணவி, இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சுரேஸ் (லண்டன்), திவ்யநேஷன் (கல்வி அமைச்சு, வடமாகாணம்) ஆகியோரின் மாமனாரும், சந்தோஷ் (லண்டன்), யதுநயனன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), சுரபி (லண்டன்), சுபஸ்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(IN/12424)(11,17) **தகவல்:- குடும்பத்தினர்.**

**021 222 7133, 077 736 3356**



பிறப்பு 05 . 05 . 1945

இறப்பு 28 . 01 . 2020

## திருமதி உருத்திரநாயகி தவராசா

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி உருத்திரநாயகி தவராசா கடந்த (28.01.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் சிதம்பரநாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரையப்பா தங்கரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற தவராசா (முன்னாள் முகாமையாளர் - உரும்பிராய் எரிபொருள் நிரப்பு நிலையம்). அவர்களின் அன்பு மனைவியும் ராதிகா (ஜேர்மனி), சயிலகா (பின்லான்), கவிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிர்மலன், ஜெயலிங்கம் தேவதர்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிதிரா, சந்தோஷ், தருண், டிஷான், கவின் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்ற அருந்தவநாயகியின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற வரதராசா, செல்லம்மா, காலஞ் சென்ற அன்னலட்சுமி, ஜெகசோதி, பத்மாவதி, யோகராசா, அரசரட்ணம், புஸ்பராணி, ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2020) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் பண்ணாகம் இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பண்ணாகம் தெற்கு,**
**சுழிபுரம்**

**தகவல்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**021 437 3222, 077 295 7031**



பிறப்பு 31 . 01 . 1952

இறப்பு 23 . 01 . 2020

## பழனிவேலு சர்வேஸ்வரன் (சர்வேஸ்)

(முன்னாள் பிரபல வர்த்தகர் - கொழும்பு)

கோப்பாய் மத்தி காளிகோவிலடியை பிறப்பிடமாகவும் கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பழனிவேலு சர்வேஸ்வரன் கடந்த (23.01.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனிவேலு பூரணம் (ஜானகி) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும் காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம் யோகம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும் சந்தானலெட்சுமி (சாந்தா) வின் அன்புக்கணவரும் மகேஸ்வரன் (கனடா), மனோரஞ்சிதம் (கனடா), நகுலேஸ்வரன் (லண்டன்), ஜெகதீஸ்வரன் (கொழும்பு) விமலேஸ்வரன் (லண்டன்), கிருத்திகா ஆகியோரின் அன்புச் சகோதரரும் குபேரன், கிருத்திகா, தர்ஷிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சண்முகம் பத்மநாதன் , சண்முகம் தில்லைநாதன் ஆகியோரின் அன்பு மருமகனும் மனோன்மணி, யோகேஸ்வரி, உருக்குமணி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (02.02.2020) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ச.பத்மநாதன் (கோப்பாய்)**
**077 724 0942**

# கேரள மாணவருக்கு கொரோனா வைரஸ்

## இந்தியாவில் முதல் ரிப்போர்ட்

புதுடெல்லி, ஜன. 31

சீனாவில் இருந்து இந்தியா திரும்பிய கேரள மாணவருக்கு கொரோனா வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அத்தகமைய இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றுடன் ஒருவர் முதல் தடவையாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றது. சீனாவில் இந்த வைரஸால் 170 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு இல்லை எனக் கூறப்பட்டு வந்தது. இந்த நிலையில், சீனா உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளில் இருந்து வந்த 800க்கும் மேற்பட்டோர் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சோதனைக்குட்படுத்தியபோது சீனாவின் வுஹான் பல்கலைக்கழகத்தில் இருந்து வந்த மாணவர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தாக்கம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. தொடர்ந்து அவரைத் தனிக் கண்காணிப்புப் பிரிவில் வைத்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. அவரது உடல்நிலை சீராக இருக்கின்றது என வைத்தியர்கள் தெரிவித்தனர். (ம-22)

# கனேடியத் தூதுவருடன் மாநகர முதல்வர் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட்டுக்கும், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்னோனுக்கும் இடையே சந்திப்பு ஒன்று நடந்துள்ளது.

இந்தச் சந்திப்பு யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ரொறோன்ரோ மாநகரத்துக்கும் யாழ்ப்பாண மாநகரத்துக்கும் இடையில் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி யாழ்ப்பாண மாநகரை சிறந்த முறையில் திட்டமிடுவதற்கும், திட்டமிட்டு நீண்ட காலத்துக்கான அபிவிருத்திதிட்டங்களை முன்னெடுப்பதற்கும் நகரத் திட்டமிடல் வல்லுநர் (அதிகாரி) ஒருவர் நியமிக்கப்படுவார் என்று கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை காலம் தாழ்த்தாது ரொரொண்டோ மாநகரத்துடன் கலந்துரையாடி சிறந்த முறையில் நடைமுறைப் படுத்துமாறும், இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருவதில் தமக்கு மிகுந்த மகிழ்ச்சி என்றும் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண நகரத்தின் தற்போதைய நிலமை தொடர்பாகவும் கனேடித் தூதுவர் கேட்டறிந்து கொண்டுள்ளார்.

மாநகரத்தின் பிரச்சினைகள், சவால்கள் குறித்தும் கனேடியத் தூதுவர் வினவியுள்ளார். அதற்கு பதிலளித்த முதல்வர் பிரதான பிரச்சினையாகத் திண்மக் கழிவகற்றல் செயன்முறையிலேயே பெரும் சிக்கல்கள் காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டினார். சுமார் அரை மணி நேரம் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அம்பாளுக்கு வழங்கிய சங்கிலிக்கு என்னாச்சு?

## சுதுமலையில் சம்பவம்

வலி.தென்மேற்கு, ஜன. 31

நேர்த்திக்கடனுக்காக அம்பாளுக்கு அணியுமாறு ஆலய அந்தணரிடம் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி சில நாள்களின் பின்னர் மாயமாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய தர்க்கம் நீடித்து அந்தணர் மீது சந்தேகப் பார்வை திரும்பியதால் அவர் தற்போது ஆலயத்துக்கு வருவதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுதுமலையிலுள்ள கோவில் ஒன்றில் சம்பவம் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது.

சாவல்கட்டில் வாழும் சுமார் 50 வயதுப் பெண், கோவிலுக்குச் சென்று தங்கச் சங்கிலியை அந்தணரிடம் கொடுத்தேன் என்றும் அம்மன் சிலையில் அணியப்பட்ட அந்தச் சங்கிலியை சில நாள்களின் பின்னர் காணவில்லை என்றும் அந்தப் பெண் கூறுகின்றார்.

சங்கிலியைப் பெற்றமைக்கான பற்றுச்சீட்டைத் தருமாறு அந்தணரிடம் கேட்டபோது, அந்தணர் வழங்கியிருந்தார் என்றும் கோவில் அலுவலகத்தில் அதைக் காண்பித்தபோது அது போலி என்றும் கூறப்பட்டது என்றும் அந்தப் பெண் கூறியுள்ளார். இது அங்கு குழப்பத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-115)

सत्यमेव जयते
இந்திய துணைத்தூதரகம்
யாழ்ப்பாணம்

முல்லைத்தீவு மக்களுக்கு
கொன்சிலர் சேவைகளை வழங்கல்

இந்திய யாழ்ப்பாண தூதரக குழு பின்வரும் நாளில் பொதுமக்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் நேரடியாக சந்தித்து இந்திய வீசா, கொன்சிலர் சேவைகளை மற்றும் புலமைப்பரிசில்கள் தொடர்பான தகவல்களையும் பிரச்சினைகளையும் கேட்டு அறிந்து தீர்த்து வைக்க வருகின்றது. பொதுமக்கள் இக்குழுவை முன்பதிவின்றி சந்தித்து தீர்வுகளை பெற்றுக்கொள்ளலாம்.

நாள்
01.02.2020 (சனிக்கிழமை)

இடம்
Ocan Park Resort, கோவில் குடியிருப்பு,
முல்லைத்தீவு

நேரம்
மு.ப 10.00 - 12.30 மணி

தொலைபேசி இலக்கம்
077 795 3786

மேலதிக தகவல்களுக்கு
தொலைபேசி இலக்கம்: 0212220505/04
மின்னஞ்சல் : cons.jaffna@mea.gov.in

# கௌரவிப்பு நிகழ்வு



மன்னார், ஜன. 31

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நானாட்டான் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாயமும் கமநல சேவைகளும் கால்நடை அபிவிருத்தி மீன்பிடி நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சின் அனுசரனையுடன் மன்னார் மாவட்ட பிரதிமாகான பணிப்பாளர் ஜே.எம்.ஏ.சுக்குறு தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மன்னார் மடு, நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய பிரதேசங்களை சேர்ந்த சிறந்த சேதனை செய்கையாளர்கள், சிறந்த வீட்டுத் தோட்ட செய்கையாளர்கள், செறிவு முறை மாமர செய்கையாளர்கள் சிறந்த தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி நிலக்கடலை செய்கையாளர்கள் மற்றும் ஆடு வளர்ப்பு, கோழிவளர்ப்பாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக பிரதி கால்நடை சுகாதார திணைக்களத்தினர், யாழ் பல்கலைக்கழக விவசாயம் கால்நடை விரிவுரையாளர்கள், கால்நடை வைத்தியர்கள் மற்றும் பிரதேச விவசாய உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலர் பிரிவில் இருந்து வருகை தந்திருந்த விவசாயிகள், பண்ணையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-213)

# விவாதச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 31

தமிழறிஞர் கலாநிதி க. சிவராமலிங்கம்பிள்ளை ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் ஆண்டு தோறும் நடத்தும் பாடசாலை மட்ட விவாதப் போட்டி இம்முறையும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வெற்றிபெறும் பாடசாலைகளுக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும் பாரதி விழாவில் வெற்றிக்கேடயமும் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

பங்குபற்றும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

போட்டி தொடர்பான மேலதிக விவரங்களுக்கு போட்டி இணைப்பாளர் ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீயுடன் 077 696 0063 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழ்ச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

### சஜித்...

மதித்துள்ள நிலையிலும் மேலும் கட்சித் தலைமைப் பதவி விடயத்தில் போராடாதிருக்க சஜித் பிரேமதாஸ தீர்மானித்துள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி புதிய அரசியல் கூட்டை அமைத்து அதன் அறிவிப்பை சஜித் வெளியிடவுள்ளார் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. சஜித், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் வேட்புமனுக் குழுவுக்கும் தலைமை வகிப்பார். இந்தப் புதிய அரசியல் கூட்டின் செயலாளர் நாயகத்தையும் சஜித்தே நியமிப்பார்.

அநேகமாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார இந்தப்பதவிக்கு நியமிக்கப்படுவார் எனத் தெரியவருகின்றது. ஆயினும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறாமல் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள சஜித் தீர்மானித்துள்ளார் என்றும் சொல்லப்படுகின்றது' என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-22)

### ரணில்தான்...

விக்கிரமசிங்க தொடர்ந்து நீடிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் கூடிய கட்சியின் மத்திய செயற்குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். ரணில் தலைமையில் நடைபெற்ற நேற்றைய கூட்டத்தில் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட அவரின் ஆதரவாளர்கள் கலந்துகொள்ளாத நிலையில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. அதே வேளை, ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவராகவும் பிரதமர் வேட்பாளராகவும் செயற்பட சஜித் பிரேமதாஸவுக்கு மத்திய செயற்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(ம-22)


## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இயங்கிவரும் பிரபல உணவகம் ஒன்றுக்கு கீழ்க்காணும் பணிநிலைக்கு பணியாளர் தேவை.
தகுதியுடையோர் நேரில் வரவும்.

- உணவு தயாரிப்பாளர் (கோக்கி)
- றொட்டி வேலை செய்பவர்
- உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்)

தொடர்புகளுக்கு
077 649 1027, 0779400963



## கொக்குவில் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
## KHC NIGHT 2020
## (ஒன்று கூடலும் இராப்போசனமும்)

கொக்குவில் இந்துக்கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய பழைய மாணவர்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர்கள் சகிதம் கல்லூரி நினைவுகளை நினைவுகூரும் முகமாகவும், பழைய மாணவர்களிடையே புரிந்துணர்வினை வளர்க்கும் முகமாகவும் கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் தாய்ச்சங்கத்தினால் ஒன்றுகூடலும் இராப்போசனமும் நாளை (01.02.2020) சனிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்விற்கு கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய சகல பழைய மாணவர்களும் கலந்து கொள்ளமுடியும்.

எனவே இந் நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புகின்ற பழைய மாணவர்கள் நர்ளை (01.02.2020) சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு முன்பதாக தங்களது ரிக்கற்றுக்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

சிரமங்களை தவிர்ப்பதற்கு நுழைவுச் சீட்டுடன் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் நுழைவுச் சீட்டினை கீழ் நிலையத்தில் நாளை (01.02.2020) சனிக்கிழமை காலை 10 மணிக்கு முன்னராக பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**சாருஜன் தொலைத்தொடர்பு நிலையம்.**
**125, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி.**

பழைய மாணவர் சங்கம்


## யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்
## அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**யா/சென்.மேரிஸ் வித்தியாலயம் - வகை II**
**யா/கோப்பாய் மகா வித்தியாலயம் - வகை II**
**யா/இருபாலை C.C.T.M.S - வகை III**

**தகைமைகள்:**

**வகை II** பாடசாலைகளுக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் 2** உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை அதிபர் சேவை தரம் 2 உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதவிடத்து அல்லது தெரிவுகள் இடம்பெறாதவிடத்து **இலங்கை அதிபர் சேவை தரம்** 3 கவனத்தில் கொள்ளப்படும்.

**வகை III** பாடசாலைகளுக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் 3** ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்றாண்டு காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி தற்போது அதிபராக கடமையாற்றும் பாடசாலை யில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களும் உதவி, பிரதி அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களும் இந்நிபந்தனைக்கு உட்பட மாட்டார்கள்

**குறிப்பு:**

மேற்படி பதவிகளுக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்ப படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவத்தை **14.02.2020** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் **"வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணிவீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2020 "** எனக் குறிப்பிடவும்.

திரு.செல்வரட்ணம் சந்திரராஜா.
வலயக் கல்விப் பணிப்பாளர்.
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்
செம்மணி வீதி. நல்லூர்

# ஆடம்பரமில்லாத வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம்,ஜன.30

வடக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர்கள், கொழும்புப் பயணத்துக்கு விமான சேவையைப் பயன்படுத்தி வந்த நிலையில் தற்போதைய ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் வாகனத்தைப் பயன்படுத்தி வருகின்றார் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் ஆளுநர்களான , ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் ரெஜினோல்ட் குரே, பலிகக்கார மற்றும் சுரேன் ராகவன் உள்ளிட்டவர்கள் பெரும் நிதிச் செலவில் விமானம் மூலமே கொழும்புக்குப் பயணித்து வந்தனர். விசேட அனுமதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் சென்ற விமானப் பயணத்துக்காக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் விமான சேவையைப் பெற்றிருந்தார்.

அதன் பிரகாரம் கொழும்பு யாழ்ப்பாணம் பயணங்களுக்காக முன்னாள் முதல்வர் 22 லட்சத்து 61 ஆயிரம் ரூபா மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து செலவு செய்திருந்தார்.

அத்துடன் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான 4 ஆண்டுகளில் வடக்கு மாகாண முதலமைச்சர் அரச செலவில் 48 தடவைகள் விமானம் மூலம் கொழும்புக்குச் சென்று வந்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் புதிய ஆளுநர் விமானத்தைப் பயன்படுத்தாமல் வாகனத்தில் கொழும்பு சென்று வருவதைப் பலர் பாராட்டியுள்ளனர்.

(க-105)


## பணியாளர்கள், தொழிலாளர்கள் தேவை

**கிளிநொச்சி, கரடிப்போக்கு, உருத்திரபுரம் வீதியில்** அமைந்துள்ள **சிவகுரு அரிசி ஆலைக்கு** கீழ்க்குறிப்பிடுவோர் உடனடியாக தேவைப்படுகின்றார்கள். இவர்கள் **அரிசி ஆலைச் செயல்பாட்டில் போதிய அறிவும் அனுபவமும் உடையவர்களாக இருத்தல் வேண்டும். தங்குமிட வசதியும். உணவும் இலவசமாக வழங்கப்படும்.** சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக் கப்படும்.

**1. முகாமையாளர் 2. கணக்காளர் 3. இயந்திர இயக்குநர்**
**4. சமையல்காரர் 5. தொழிலாளர்கள் ( இருபாலாரும்)**

(ekn. 919) (13.17)

**தொடர்பு: 077 772 2305**


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி ( வெளிவாரி )

1. இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2018
2. மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2018

மேற்படி பரீட்சைகளினை 15.02.2020 (சனிக்கிழமை) தொடக்கம் 01.03.2020 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 11.02.2020 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் 14.02.2020 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு
021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
30.01.2020

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
### வணிகமாணி கற்கை நெறி (வெளிவாரி) -2017
### வெளிவாரிப் பரீட்சைகள்

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படுகின்ற வெளிவாரிப் பரீட்சைகள் கீழ் வரும் அட்டவணையின் பிரகாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

| பரீட்சையின் பெயர் | பரீட்சை நடைபெறும் காலம் | அனுமதி அட்டை விநியோகம் |
|---|---|---|
| வணிகத்தில் முதலாம் தேர்வு - 2017 முதலாம் அரையாண்டுப் பரீட்சை | 15.02.2020 – 07.03.2020 | 11.02.2020 – 14.02.2020 |
| வணிகத்தில் இரணடாம் தேர்வு – 2017 முதலாம் அரையாண்டுப் பரீட்சை | 15.02.2020 – 01.03.2020 | 11.02.2020 – 14.02.2020 |


மேலதிக விபரங்களுக்கு **021-222 3612** என்ற தொலைபேசி எண்ணினூடாக தொடர்புகொள்ள முடியும்.

**பதிவாளர்**
30.01.2020




# சூரியனின் பிளாஸ்மா செல்களை படம்பிடித்து அமெரிக்கா வரலாற்றில் மகத்தான சாதனை!



வொஷிங்டன், ஜன. 31

சூரியனின் கொந்தளிப்பான மேற்பரப்பு இதுவரை இல்லாத வகையில், அமெரிக்காவில் உள்ள புதிய நவீன தொலைநோக்கியின் மூலம் துல்லியமாக படம்பிடிக்கப்பட்டுள்ளது. பிளாஸ்மா செல்கள் இதில் தெட்டத்தெளிவாகத் தெரிகின்றன.

கோடிக்கணக்கான விண்மீன்களின் தொகுதியே அண்டம். கோடிக்கணக்கான அண்டங்களின் தொகுதியே பேரண்டம். பேரண்டத்தில் காணப்படும் பல்வேறு அண்டங்களில் ஒன்றுதான் பால்வெளி மண்டலம். சூரியன் உட்பட நம் கண்களுக்குத் தெரியும் அனைத்துமே பால்வெளி மண்டலத்தைச் சார்ந்தவை. சூரியனைப்பற்றியும், சூரியக்குடும்பத்தில் உள்ள கோள்கள் பற்றிய ஆராய்ச்சிகளிலும் உலகின் பல நாடுகள் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில், வானியற்பியல் மற்றும் விண்வெளி ஆராய்ச்சி துறையில் முக்கிய பங்கு வகிக்கும் நாடான அமெரிக்காவின் தேசிய அறிவியல் அமைப்பு சூரியனின் மேற்பரப்பை இதுவரை யாரும் எடுக்காத வகையில் துல்லியமான புகைப்படத்தை நவீன நுண்ணோக்கி மூலம் படம்பிடித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் இயக்குநர் கூறுகையில், 'சூரியனின் இதுவரை காணப்படாத மேற்பரப்பை இந்த இன்யூய் சூரிய தொலை நோக்கி கண்டறிந்துள்ளது. இது சூரியனைப் பற்றிய அறிவியல் பிரிவின் சகாப்தத்தில் முக்கிய பங்கு வகிக்கும். இந்த தொலைநோக்கி படம்பிடித்துள்ள சூரியனின் படம்தான் மிக மேம்படுத்தப்பட்ட படமாகும். சமீபத்திய படங்கள் முழு சூரியனையும் உள்ளடக்கிய கொந்தளிப்பான கொதிக்கும் பிளாஸ்மாவின் வடிவத்தைக் காட்டுகின்றன. இந்த இன்யூய் சூரிய தொலைநோக்கி மூலம், சூரியனின் வளிமண்டலத்தின் வெளிப்புறப்பகுதியில் உள்ள காந்தப்புலங்களை வரைபடமாக்க முடியும்' என தெரிவித்தார்.

(ம)

# துயர் பகிர்கின்றோம்



## தங்கராஜா அன்பானந்தன்

(பொதுமுகாமையாளர் - உதயன், சஞ்சீவி குழுமம்)

பாசமுலவிய கண்களும் எங்கே
பாய்ந்து துழாவிய கைகளும் எங்கே
தேசம் அளாவிய கால்களும் எங்கே
தேடி அலைகின்றோம் நாமும் இங்கே

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரிய கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக் கூடும்

30-01-2020 அன்று காலமான, எமது நிறுவனத்தின் பொதுமுகாமையாளர் அன்பானந்தன் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் வேண்டுகின்றோம்.

**துயர்பகிர்வோர்:**

**நிர்வாக இயக்குநரும், பணியாளர்களும்**
**உதயன் - சஞ்சீவி குடும்பம்.**

பழனித்துரை தர்மகுமாரன்



# அலைபேசிகளும் அலைபாய்கின்ற சமூக அமைப்பும்

நவீன உலகின் மனிதன் தன் அறிவைப் பயன்படுத்திப் புதியபுதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்கிறான். ஆனால் அதனால் வரும் ஆபத்தை உணராதவனாகத் தனது அறிவுக்குக் கிடைத்த வெற்றியை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடுகிறான். பணத்தையும் செல்வத்தையும் வாரிக் குவித்துக்கொள்கின்றான்.

அந்த வகையில் இன்றைய கால கட்டத்தில் தமிழ் சமூக அமைப்புக்கு இமாலய அச்சுறுத்தலாக அமைவது கையடக்கத் தொலைபேசி என்றால் மிகையில்லை. இதனால் ஏற்படும் நன்மைகளை விடவும் தீமைகளே மிகமிக அதிகமாகவுள்ளன. ஏனெனில் இன்று அலைபேசிகள் தவளாத கரங்களே இல்லை. குழந்தைகளின் விளையாட்டுப் பொருள்களில் ஒன்றாகக்கூட இடம்பெற்றுள்ளது அது.

நவீன தொடர்புச் சாதனங்களுக்கு ஒருபோதும் வரவேற்புக்குப் பஞ்சம் இருந்ததில்லை. ஆனால் கையடக்கத் தொலைபேசியை இந்த அளவுக்குக் கொண்டாடுவார்கள் என்று யாருமே நினைத்திருக்க மாட்டார்கள். அந்தளவுக்கு அதன் ஆதிக்கம் அதிகரித்த வண்ணமே உள்ளது. ஆரம்ப காலங்களில் குடும்பத்திற்கு ஒன்று என்று இருந்த கைத்தொலைபேசி இன்று இரண்டு மூன்றாக அதிகரித்துள்ளது. ஆரம்பத்தில் குடும்பத்துக்கு நான்கு, ஐந்தாக இருந்த குழந்தைச் செல்வங்கள் இன்று ஒன்று, இரண்டாகக் குறைந்துள்ளது.

## குறுகிய காலத்துக்குள் சமூக மயப்பட்டுள்ளது

கைத்தொலைபேசி முதன் முதலாக 1977ஆம் ஆண்டு சிக்காக்கோவில் பாவனைக்கு வந்தது. அது இன்று பட்டிதொட்டி தொடங்கி குக்கிராமம் வரை சிணுங்கிக் கொண்டிருக்கிறது. தொழில் அதிபர் தொடங்கி கூலித் தொழிலாளிகள் வரையும், முதியோர் தொடங்கி சிறுவர்கள் வரையும், கல்வி கற்றவர் முதல் பாமரர் வரையும் தகுதி, பால், வயது வேறுபாடின்றி எல்லாத் தரப்பினரதும் கைகளிலும் கரிசனையுடன் காணப்படுகின்றது. இது பயன்பாட்டுக்கு வந்த குறுகிய காலத்துக்குள்ளேயே சமூக மயப்படுத்தப்பட்ட தொழில்நுட்பசாதனமாகும்.

கைத்தொலைபேசியின் மூலம் தொடர்பாடலையும், தகவல்களையும், தொழில்நுட்பத்தையும் இலகுவாக்குவதற்கே அபிவிருத்தியடைந்த நாடுகள் அதைப் பாவித்து வருகின்றன. ஆனால் எம்மவர்கள் பொழுது போக்குக்காகவும், அரட்டை அடிப்பதற்கும், தேவையற்ற விடயங்களுக்குமே அதிகளவு பயன்படுத்துகின்றனர். கையடக்கத் தொலைபேசி கைக்குழந்தைகளைக் கைதிகளாக்கியுள்ளது. இதனை நடைமுறையில் சமூக அமைப்பில் காணக்கூடியதாக உள்ளது.

## அன்றும் இன்றும்

எமது பெற்றோர்கள் நிலாவையும், நட்சத்திரத்தையும், இயற்கையில் உள்ளவற்றையும் காட்டியே உணவை ஊட்டினார்கள். இன்றைய பெற்றோர்கள் கைத்தொலைபேசியைக் கொடுத்து உணவு ஊட்டுகின்றனர். அதுமட்டுமன்றி அழுகின்ற குழந்தையின் அழுகையை நிறுத்தவதற்குக் கைபேசியைக் கொடுக்கின்றனர். தமது வேலைகளை இலகுவாக்குவதற்கும் கைத்தொலைப் பேசியைக் குழந்தையிடம் கொடுக்கின்றனர். இதன் மூலம் கண்பார்வையில் பிரச்சினை ஏற்படுவதுடன் குழந்தைகளின் சிந்தனையையும் சிதைகின்றது. அது மட்டுமன்றிக் கைத்தொலைபேசியில் இருந்துவரும் கதிர்வீச்சு குழந்தைகளுடைய மெல்லிய மண்டையோடு வழியாக ஆழமாக ஊடுருவ அனுமதிக்கின்றன. உள்ளே மூளையிலும் நரம்பு இழையங்களிலும் வளர்ச்சி நிகழ்ந்து கொண்டிருப்பதால் கதிர்கள் இழைகளைச் சேதமாக்குவதற்கான வாய்ப்பு மிகவும் அதிகமாகக் காணப்படுவதால் புற்றுநோய் ஏற்படும் அபாயமும் உள்ளது என வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.

கைத்தொலைபேசி பேசுவதற்கான தொடர்புசாதனம் மட்டுமல்ல. அதற்குள் வானொலி, தொலைக்காட்சி, முகநூல் வலைத்தளம் என உலகமே உள்ளடங்கி உள்ளதால் அதனுள் குழந்தைகள் கணிசமான அளவு தமது நேரத்தைச் செலவிட்டு விடுகின்றனர்.

## ஆபத்துக்கள் அதிகம்

நவீன வசதிகள் என்று வரும்போது அவை தம்முடன் ஆபத்துக்களையும் அழைத்து வருகின்றன என்பதற்கு இந்தக் கைத்தொலைபேசியும் விலக்கில்லை. பயன்பாட்டுக்கு வந்த நாள் முதலே நிழல் உலக நடவடிக்கைகளுக்குத் துணைபோகின்றன. பேசிக்கொண்டே பயணம் செய்வதால் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. குடும்பங்களில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. சிறுவர்களின் எண்ணங்களை எடுத்தெறிகின்றன. அவசரமான அநாகரிகமான செயலுக்கும் உடந்தையாக உள்ளன.

தொடர்பாடலில் கைத்தொலைபேசிகளின் பிறப்பின் நோக்கம் துலாம்பரமானது. கம்பி வழித்தொலைபேசியில் ஒருவரைத் தொடர்பு கொள்ள இயலாத நிலையில் அந்தத் தொடர் இடைவெளிய்ய இட்டு நிரப்புவதற்கென்றே கைத்தொலைபேசி அவதரித்தது. ஆனால் அளவாகப் பேசப்படவேண்டிய கைத்தொலைபேசி அரட்டை அரங்காகப் பேசித் தீர்க்கப்படுகின்றன. இதில் தங்களது வாடிக்கையாளர்களது வாய் மூடிவிடக்கூடாது என்பதில் இணைப்பு நிறுவனங்கள் கண்ணும் கருத்துமாக உள்ளன.

இதற்காக இலவச நேரங்கள், இலவச சலுகைகள் என்பவற்றை வாரி வழங்குகின்றன. இதனால் ஒரு மாதத்துக்குள் பேசியோ, பார்த்தோ முடிக்க வேண்டுமென்பதற்காகக் குடும்பத்தில் மகிழ்ச்சியாக ஒன்றாக இருந்து உணவு உண்பதில்லை, கல்வியை பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்பதில்லை, பிள்ளைகளின் நடவடிக்கையை அவதானிப்பதில்லை, குடும்ப அங்கத்தவர்களுடன் மகிழ்ச்சியாகப் பேசுவதில்லை போன்ற பிரச்சினைகள் பூதாகரமாக முளைவிடுகின்றன. அலைபேசிகள் என்பவை அற்புதமானவை. ஆனால் அவை எதற்காகக் கண்டுபிடிக்கப்பட்டனவோ அதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். தவறின் விளைவுகள் பாரதூரமானவையாக அமைந்துவிடும். ■

பழனித்துரை தர்மகுமாரன்,
ஆசிரியர்,
உடுவில் மகளிர் கல்லூரி.



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தூக்கி எறியப்பட்ட தமிழ்

போர் முடிந்த பின்னர் தமிழ் நிலப்பரப்புக்களில் விகாரைகள் உருவாகுதல் ஒரே நாளில் , எடுத்தோம் கவிழ்த்தோம் என்று நடந்ததில்லை. முதலில் வீதியோரமாக ஒரு சிறு காவலரண் அல்லது மினி முகாம் அமைக்கப்படும். அந்த முகாமில் இருக்கும் சிப்பாய்கள் அதற்கு அருகில் ஒரு சிறு மண்மேடையை அமைப்பார்கள். நிலமட்டத்தில் இருந்து சற்று உயர்வாக அமைக்கப்பட்ட அந்த மண்மேடை யில், ஒருநாள் காலை வெள்ளரசு மரக்கன்று நாட்டப்பட்டு, தண்ணீர் ஊற்றப்பட்டிருக்கும்.

வெள்ளரசு மரம் வளரத் தொடங்க, அதன் அருகே புத்தர் சிலை ஒன்று தோன்றும். சிப்பாய்கள் தினசரி அந்தச் சிலையை வணங்கத் தொடங்குவார்கள். பிக்குகளின் பிரசன்னம் நிகழ்வதும் வழக்கமாகி விடும்.அதன் பின்னர் திடீரென ஒருநாள் வெள்ளரசுமரக் கன்றுக்கு அருகில் பிக்குகள் கூட்டமாகக் குவிந்து நின்று, விகாரைக்கு அடிக்கல்நாட்டியபின்னர்தான்சுற்றிலும்உள்ளவர்களுக்கு , அங்கு விகாரை ஒன்று முளைக்கப் போவது மண்டையில் உறைக்கும் . பின்னர் ஆர்ப்பாட்டம், எதிர்ப்பு என்று கிளம்புவோம். என்னதான் தலைகீழாக நின்றாலும், அந்த விகாரை கலசத்தோடு எழுவதை தடுக்கமுடியாமல் , வாய் பார்த்து விட்டு அடுத்த வேலையைப் பார்க்கக் கிளப்பி விடுவோம்.

மிகத் திட்டமிட்டு, தமிழர்களின் கண்ணுக்கு முன்னா லேயே பெரும் ஆரவாரம் எதுவுமின்றி, சிறுகச் சிறுக , எவருக்கும் சந்தேகம் வராமல் நடந்து , கடைசியாக எல்லாம் முடிந்த பின்னரே " அட இதுதானா இவ்வளவு நாளாக நடந்தது ?" என நம்மை நாமே கேட்குமளவுக்கு, நாசூக்காக தன் திட்டத்தைப் பேரினவாதம் அரங்கேற்றியி ருக்கும்.

இதே யுக்தியைத்தான் இப்போது தேசியகீத விவகாரத்தி லும், பேரினவாதிகள் கையாண்டிருக்கிறார்கள். கோத்தாபய ஜனாதிபதியானவுடனேயே, பேரினவாதிகள் குளிர்விட்டுப் போனவர்களாக மீண்டும் களத்தில் இறங்கியிருந்தார்கள்.ஈஸ்டர் தாக்குதலும் ஒரு சாதகப் புள்ளியாக இருந்ததால், தமிழ் முஸ்லிம் என்ற வேறுபாடின்றி சிறுபான்மையினரை அடக்குதலையும், சிங்களப் பெருந்தேசியத்தை மேலோங்கச் செய்வதிலும் பகிரங்கமாக ஈடுபட்டார்கள். அதன் ஒருகட்டமாக, இம்முறை சுதந்திர தின நிகழ்வில் ' தனிச் சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதம் பாடப்படும்' என்ற கருத்தை அமைச்சர் ஒருவர் மூலமாக அரசு முதலில் கசியவிட்டு, ஆழம் பார்த்தது. சிறுபான்மையினர் தரப்பில் இருந்து பெரும் எதிர்ப்பலை வந்தபோதும், அதைவிட பலமடங்கு அதிகமாகச் சிங்களப் பெருந்தேசியவாதிகள், இந்த அறிவிப்பை பெரும் ஆரவாரத்தோடு வரவேற்றார்கள். நல்லாட்சிக்காலத்தில் சிங்களம்,தமிழ் ஆகிய இருமொழிக ளிலுமே சுதந்திர தினத்தில் தேசிய கீதம் இசைக்கப்ப ட்டிருந்தது. அப்போதெல்லாம் இந்தப் பெருந்தேசி யவாதிகள் கைகளைப் பிசைந்து கொண்டிருந்துவிட்டு, இப்போது தமக்குச் சாதகமான சூழல் வந்தவுடன் ஆர்ப்பரிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

சுதந்திரதினத்தில் தனிச் சிங்களத்தில் தேசியகீதம் பாடப்போவதாக அரச தரப்பில் கசியவிடப்பட்ட தகவல்கள் குறித்து பிரதமர் மஹிந்தவிடம் கேட்டபோது, அப்படி எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை என்று திட்டவட்டமாக மறுதலித்திருந்தார். அத்தோடு, தமிழ்ப் பிரதேசங்களில் தமிழிலும், சிங்களப் பிரதேசங்களில் சிங்களத்திலும் பாடுவதற்கு தடையில்லை என்றிருந்தார். ஆனால் இப்போது உத்தியோகபூர்வமாக அரசு ' சுதந்திர தினத்தில் சிங்கள த்தில் மட்டும் தேசியகீதம்' என்று அறிவித்திருக்கிறது. முதலில் ஆழம் பார்ப்பதற்காக கசியவிடப்பட்ட தகவல், பெருந்தேசியவாதிகளிடம் எடுபட்டதால், அதன் மூலம் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்கு வங்கியை அதிகரிக்கலாம் என்ற நம்பிக்கை வந்ததாலேயே, இப்போது உத்தியோக பூர்வமாகவும் , தமிழைத் தூக்கி எறிந்துவிட்டு, சிங்களத் தேசிய கீதத்தை இடுப்பில் தூக்கி வைத்து அரசு அழகு பார்க்கப் போகின்றது.எல்லாம் வாக்கு செய்யும் வேலை.

# 'கொரோனா'வை அழிக்க எதிர்க்கட்சி ஒத்துழைக்கும்



கொழும்பு, ஜன.31

கொரோனா வைரஸின் தாக்கத்திலிருந்து நாட்டை காப்பாற்ற எதிர்க்கட்சி என்ற வகையில் அரசுக்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும். ரணில் விக்கிரமசிங்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தொலைபேசியில் கலந்துரையாடியதன் பின்னர் இந்தியாவிலிருந்து இலவசமாக சுவாசக் கவசங்களை (மாஸ்க்) இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சீனா வுஹான் நகரில் பரவிவரும் கொரோனா வைரஸ் உலகளாவிய ரீதியில் பெரும் அச்சுறுத் தலை ஏற்படுத்தியுள்ளது. எமது நாட்டிலும் இந்த வைரஸ் தொற்றுதலுக்குள்ளான நோயா ளியொருவர் கண்டறியப்பட்டுள்ளார். அதனால் இங்கும் அந்த பதற்ற நிலமை தோற்றம் பெற் றுள்ளது. இந்தப் பெண் தனது நாட்டவர்களு டன் இணைந்து நாட்டில் பல பகுதிகளில் நடமா டியுள்ளமையும் தெரிய வந்திருக்கின்றது. எமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண் டியது அவசியமாகும்.

அதேவேளை, வைரஸ் தொற்றுக்குள்ளாகி 14 நாள்களுக்கு பின்னரே நோயின் அறிகுறி களை அவதானிக்க முடியும் என்று மருத்துவர் கள் தெரிவித்துள்ளனர். வைரஸ் தொற்றுக்குள் ளானோர் நாட்டில் இருப்பார்களாயின் அவர்க ளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

வைரஸின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக சுவாசக் கவசங்களை (மாஸ்க்) அணியுமாறு வைத்தியர்கள் அறிவித்தல் விடுத் துள்ளனர். இதேவேளை சுவாசக் கவசங்க ளுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதற்கமைய எம் 95 வகை சுவாசக் கவசங்க ளையே அணிய வேண்டும். அந்த கவ்சங்களே தரமானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (எ)





# நீதி கோரி வவுனியாவில் உறவுகள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜன. 31

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உற வுகள் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று கேட்டும் அவர்கள் காணாமலாக்கப்பட்டமைக்கு நீதி வேண்டும் என்று வலியுறுத்தி யும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமாகிய ஆர்ப்பாட்டம் பேரணியாக பஜார் வீதி ஊடாக மருத்துவமனை சுற்றுவட்ட வீதியை அடைந்து மீண் டும் பழைய பேருந்து நிலையத்தைச் சென்றடைந்தது.

இதன்போது, "எங்கே எங்கே பிள்ளைகள் எங்கே, வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், ஜனாதிபதியின் செயலை வன்மை யாக கண்டிக்கிறோம்," என்ற கோசங்களை எழுப்பியவாறும், இலங்கையில் ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொரு நீதியா?, கண வன்மாரை கையளித்த சின்னஞ்சிறு உறவுகளை எண்ணிப் பார்! என்பன போன்ற பல வாசகங்கள் எழுதிய பதாகைகளைத் தாங்கியவாறு உறவுகள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ப. சத்தியலிங்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர் சட்டத்தரணி கே. சுகாஸ் மற்றும் ஐந்து மாவட்டங்களிலும் காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகளின் சங்கங்களின் தலைவிகள் எனப் பல ரும் கலந்து கொண்டிருந்தனர். (த-110)


# கொடிகாமத்தில் டெங்கு பரிசோதனை

சாவகச்சேரி, ஜன. 31

சாவகச்சேரி நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக் குட்பட்ட கோயிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவிலும் கொடிகாமம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் மத்தி பிரிவிலும் டெங்குப் பரிசோதனைகள் நேற்று நடைபெற்றன.

சுகாதாரத் திணைக்கள அலு வலர்களுடன் இணைந்து பிரதேச செயலக அலுவலர் கள், பொலிஸார் டெங்குக் கட் டுப்பாட்டு உதவியாளர்கள், படையினர் என குழுக்கள் வீடு வீடாகச் சென்று பரிசோத னைகள் மேற்கொண்டு வரு கின்றனர். வீடுகளில் ஆள் கள் இல்லையெனின், டெங்கு இல்லாததை உறுதிப்படுத்தும் வகையில் துப்புரவு செய்யு மாறு கோரும் மஞ்சள் நிற அறிவித்தலை ஒட்டிவிட்டுச் செல்கின்றனர்.

டெங்குக் குடம்பியான லாவா காணப்படின் காணி மற்றும் குடியிருப்பாளர்களுக்கு எதிரா கப்பொலிஸார்சட்டநடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். தினமும்பத்துக்குழுக்கள்களத் தில் இறங்கி பரிசோதனை மேற்கொண்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)



# சிந்திப்பார்களா ஆட்சியாளர்கள்?



■ சேரலாதன்

பொருள்களின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளமையால் வறிய மக்களும்.

நடுத்தர வருமானத்தைப் பெறுகின்ற மக்களும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

புதிய அரசின் ஆட்சிக் காலம் ஆரம்பித்தவுடனேயே திடீரென இத்தகையதொரு நிலை உருவாகியுள்ளமை மக்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. அரிசியின் விலை உச்சத்தைத் தொட்டு நிற்கின்றது.

அதற்கு அரசு விதித்த கட்டுப்பாட்டு விலையை வர்த்தகர்கள் கடைப்பிடிக்காமல் இருந்து வருவது ஒருபுறமிருக்க அரிசியை வர்த்தகர்கள் வெளியே விடாது பதுக்கி வைத்திருப்பதால் அதைப் பெறுவதில் நுகர்வோர் அதிகமாகச் சிரமப்பட வேண்டியுள்ளது. இலங்கையை ஒரு விவசாய நாடெனஅழைக்கின்ற போதிலும் அரிசிக்கு மக்கள் படுகின்ற கஷ்டங்களைப் பார்க்கும் போது என்ன சொல்வதென்றே புரியவில்லை.

அரிசி மட்டுமல்ல உப உணவுப் பொருள்களின் விலைகளும் உச்சம் தொட்டு நிற்கின்றன. தொடர்ந்து பெய்த மழை காரணமாக மரக்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் அவற்றின் விலைகளும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன.



வெங்காயம் தங்கத்துக்கு நிகராகக் கருதப்படும் அளவுக்கு விலை உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது. எமது அண்டை நாடான இந்தியாவில் கூட வெங்காயம் மிகவும் அதிகரித்த விலையில் விற்கப்படுவதைக் காண முடிகின்றது.

வெங்காய உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் ஒன்றான இந்தியா தற்போது பிற நாடுகளிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. வெங்காயம் ஒருபுறமிருக்க ஏனைய மரக்கறி வகைகளும் உச்ச விலையில் விற்பனை செய்யப்படுவதைக் காண முடிகின்றது.

சாதாரண மக்கள் அன்றாடம் தமது உணவில் சேர்த்துக் கொள்ளும் கடலுணவுகளும் அதிக விலைக்கே விற்கப்படுகின்றன. வறிய மக்களைப் பொறுத்தவரையில் சாதாரண உணவைக் கூட எடுத்துக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வற் வரியை அரசு குறைத்தால் ஏற்படக் கூடிய அனுகூலங்களும் மக்களைச் சென்றடையவில்லை. இதற்கு சமாதானம் கூறுவதைத் தவிர அரசினால் வேறு எதையும் செய்ய முடியவில்லை. இதனால் பறிக்கப்பட்டு வருவது அப்பாவி மக்களே தான்.

மலையக மக்கள் இங்கு வந்த நாளில் இருந்து பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அவர்களுக்கு வசதியான வாழ்விடங்களம் கிடையாது.

கடந்த அரசின் காலத்தில் இவர்களில் ஒரு தொகுதி மக்களுக்குத் தனி வீடுகள் அமைத்து வழங்கப்பட்ட போதிலும், அவை போதுமானவையாகக் காணப்படவில்லை. அது மட்டுமல்லாது தோட்டங்கள் நன்கு பராமரிக்கப்படாமையால் தோட்டத் தொழிலாளர்களால் தமக்குத் தேவையான வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடிய வில்லை.

அரசு மார்ச் மாதம் முதல் அவர்களின் நாளாந்த வேதனத்தை ஆயிரம் ரூபாவாக வழங்கவிருப்பதாக அறிவித்துள்ளது. கடந்த அரசின் காலத்திலும் இது தொடர்பாகப் பேசப்பட்டது. ஆனால் அது சாத்தியமாகவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலை இலக்குவைத்துஅரசின் அறிவிப்பு வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் மலையக மக்களுக்கு நன்மை கிடைப்பதைப் பாராட்டத்தான் வேண்டும். அரசியலுக்கு அப்பால் மக்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே நல்லதொரு அரசுக்குப் பெருமை தரக் கூடியது.

இதன் மூலமாகவே மக்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள முடியும். மக்களின் அக்கறை இல்லாத எந்தவொரு அரசும் மக்களால் ஏற்கப்படுவதில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச தோற்றதற்கு இதுவுமொரு பிரதான காரணமாகும். ரணில் தலைமையிலான அரசு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அக்கறை காட்டவில்லை.

அந்த அரசின் ஆயுளில் பெரும்பகுதி அரசியல் முரண்பாடுகளிலேயே கழிந்துவிட்டது. கட்சிக்குள் நிலவிய உட்பூசல்கள், மைத்திரியுடனான மோதல் நிலை மக்களின் பொருளாதாரப் பிரச்சி னைகளுக்குத் தீர்வு காணப்படாமை, நாட்டின் சகல பகுதிகளிலும் எதிரணிக்கு மாற்றீடான பரப்புரைகளை மேற்கொள்ளாமை, தமிழர்கள் தொடர்பாக இனவாதிகள் தெரிவித்த தவறான கருத்துக்களுக்கு உகந்த பதிலடி வழங்காமை, இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமை ஆகிய காரணங்களால் சிங்கள மக்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளருக்கு அதிகளவில் வாக்களிக்கவில்லை.

தமிழ் மக்களும் வேறு வழியில்லை என்ற நிலை யில்தான் சஜித்துக்கு தமது வாக்குகளை அமோகமாக வழங்கினார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் எவற்றுக்கும் ஐ.தே.க அரசு தீர்வு காணாத நிலையிலும், தமிழர்களின் வாக்குகளை சஜித்பெற்றாரென்றால் எதிரணியின் மீது அந்த மக்கள் கொண்டுள்ள வெறுப்பையே காரணமாகக் கூற முடியும். தற்போது கூட தமிழர்களின் விடயத்தில் ராஜபக்ஷாக்கள் குழம்பி நிற்கின்றனர்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பாக நாட்டின் ஜனாதிபதியும், பிரதமரும் மாறுபட்ட கருத்துக்களைக் கூறி மக்களைக் குழப்பி வருகின்றனர். இந்தியாவுக்கு ஒரு முகத்தையும் தமிழர்களுக்கு ஒரு முகத்தையும் காட்டி ஆட்சியாளர்கள் அனைவரையும் ஏமாற்றுகின்ற தந்திரத்தைக் கடைப்பிடிப்பதைக் காண முடிகின்றது. அது மட்டுமல்லாது சிங்கள மக்களுக்கும் வேறொரு முகத்தைக் காட்டி வருகின்றனர்.

நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரையில் இதை எதிர்பார்க்க முடியும். மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஆட்சியில் அமர்ந்துவிட்டு அந்த மக்களை மறந்துவிடுவதென்பது மிகப்பெரிய துரோகமாகவே கருதப்படும். வாக்குக் கேட்கும் போது பல்லிளிப்பதும், காரியம் முடிந்தவுடன் பல்லைக் கடிப்பதும் நேர்மையான அரசியல் வாதிகளுக்கு ஒருபோதுமே அழகுசேர்க்க மாட்டாது.

பொருளாதாரப் பிரச்சினையாகட்டும், வேலையில்லாப் பிரச்சினையாகட்டும், அல்லது இனப்பிரச்சினையாகட்டும் அவற்றை நேர்மையாக எதிர்கொண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பவனே மக்களின் நன்மதிப்பைப் பெற்றவனாகக் கருதப்படுவான். மற்றவர்கள் மக்களை ஏமாற்றுபவர்களாகக் கணிக்கப்பட்டுப் புறமொதுக்கப்படுவார்கள்.

ஆசிரியருக்கான கடிதம்

## இவர்களுக்கு எப்போது நியமனம்?

கிராம சேவையாளருக்கு உதவியாளர்களாக யாழ்.மாவட்டத்துக்கு நியமனம் வழங்கப்பட்டவர்கள் மாவட்டச் செயலகத்துக்குச் சென்று கையொப்பம் வைத்தனர். இது சகலரும் அறிந்த விடயம். பின்னர் கடந்த அரசு ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் தான் வேலை வழங்கப்படும் என்று தெரிவித்து, அவர்களுடைய நியமனத்தை இடைநிறுத்தி வைத்தது. ஆனால் இதுவரை வேலை வழங்கப்படவில்லை.

யாழ்.மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் சட்டத்தரணிகளாக உள்ளனர். இவர்கள் இந்த வேலை விடயமாகக் கொழும்பு நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்து நியமனக் கடிதம் பெற்றவர்களுக்கு வேலை வழங்க ஆவன செய்ய வேண்டும். தற்போது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த தேர்தலுக்குத் தங்களுக்கு வாக்குப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்புடன் இருக்கின்றனர்.. எனவே இதற்கு உடன் நடவடிக்கை எடுக்கும்படி நியமனம் பெற்றவர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

மு.தர்மலிங்கம்
மொந்திபுலம், காரைநகர்

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# கொரோனாவைத் தடுக்க எடுக்கும் முயற்சி போதாது

## ஜே.வி.பி. கூறுகின்றது



கொழும்பு, ஜன.31

கொரோனா வைரஸ் தாக்கப்பட்டுள்ளவர்கள் நாட்டுக்குள் உட்பிரவேசிப்பதை தடுப்பதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் போதா. விமான நிலையத்தில் அதிநவீன தொழ்நுட்ப இயந்திரங்கள் பொருத்தப்பட்டு விசேட பொறிமுறையொன்றும் வகுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் தொடர்பில் நாட்டில் குழப்பகரமான நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. எமது நாடு ஒரு தீவு என்பதால் இவ்வாறான நோய்கள் நாட்டுக்குள் உள்நுழைவதை இலகுவாக முகாமைத்துவம் செய்ய முடியும்.

விமான நிலையத்தின் ஊடாக நோயாளர்கள் நாட்டுக்குள் உட்பிரவேசிப்பதை தடுப்பதே நாம் செய்ய வேண்டிய முதல் பணியாகும். ஆனால் அரசு அதற்காக முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் போதா. அதிநவீன தொழில்நுட்ப இயந்திரங்களை பொருத்தி நோயாளர்களை கண்டறிய வேண்டும்.

விமான நிலையத்தில் நாட்டுக்குள் உள்நுழையும் நோயாளர்களை தடுப்பதற்காகச் சிறப்புப் பொறிமுறைகளை நாம் கையாள வேண்டும். இந்த விடயம் தொடர்பில் பணியில் ஈடுபடும் சுகாதார அதிகாரிகள் பாதுகாப்புகளை பலப்படுத்த வேண்டும். ஆனால் போதியளவு பாதுகாப்புடன் அதிகாரிகள் செயற்படவில்லை.

அதேபோன்று நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள மக்கள் பயன்படுத்தும் முகக் கவசம் (மாஸ்க்) போதுமானதாகவில்லை. அதற்கு பற்றாக்குறை நிலவுகிறது. சில இடங்களில் முகக் கவசம் அதிக விலைக்கும் விற்பனை செய்யப்படுகிறது. ஒட்டுமொத்தமாக இந்த நோய் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் போதா -என்றார். (எ-24)





## பளையில் சிறப்புற நடந்த நடமாடும் மருத்துவ முகாம்

பளை, ஜன. 31

தொழுநோய் தினத்தையொட்டி (ஜனவரி 26) பளை வண்ணாங்கேணி பொது நோக்கு மண்டபத்தில் நடமாடும் மருத்துவ முகாம் நடைபெற்றது.

அதில் தொழு நோய் மட்டுமன்றி, காச நோய் மற்றும் பாலியல் நோய் தொடர்பான சுகாதாரக் கல்வியும் வழங்கப்பட்டது.

பளை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, கிளிநொச்சி மாவட்ட தொழுநோய் தடுப்பு இயக்கம், மாவட்ட மார்புநோய் சிகிச்சைப் பிரிவு, மாவட்ட பாலியல் நோய் சிகிச்சைப் பிரிவு, ஐக்கிய அபிவிருத்தி நிதியம் என்பன இணைந்து இந்த முகாமை நடத்தின. இதில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## பொதுத் தேர்தல் வியூகம் வகுக்கின்றது பெரமுன!

### பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடல்

கொழும்பு, ஜன.31

நாடாளுமன்றத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது மற்றும் கூட்டணியின் பொதுச் சின்னம் தொடர்பாக சிறிலங்கா பொதுஜன பெரமுன மற்றும் அதன் பங்காளிக் கட்சிகளிடையே கலந்துரையாடல் நடந்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக்கட்சி, இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ், பிவித்துரு ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரிகள் முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணி உட்பட 10க்கும் அதிகமான கட்சிகள் கலந்துகொண்டுள்ளன.

எதிர்வரும் பொதுத் தேர்தலை வெற்றி கொள்வது மற்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் தொடர்பாகக் கூட்டணி உடன்படிக்கையைத் தயாரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன. தேர்தல் சின்னம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பிய பின்னர் இந்த விடயங்கள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது என்று அறிய முடிகின்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் காமினி லொகுகே, நாடாளுமன்றத் தேர்தலை வெற்றி கொள்வது தொடர்பான காரணிகள் குறித்துத் தீர்க்கமாகப் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தப்பட்டது. கல்வி கற்ற சிறந்த வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. ஐ.தே.கவில் உள்ள எவரேனும் எம்முடன் இணைய வேண்டுமெனில் முதலில் அவர் தேர்தலில் வெல்ல வேண்டும்-என்றார். (எ-24)

## மீனவர்களுக்கான ஓய்வூதிய திட்டம் விரைவில் மீளமைப்பு

கடற்றொழிலாளர்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ள ஓய்வூதியத் திட்டத்தை மீளமைப்பதற்கான நடவடிக்கைகளை கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

1990 ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் ஊடாக சுமார் 69 ஆயிரம் பயனாளிகள் உள்வாங்கப்பட்டனர். எனினும் நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக கடந்த பல ஆண்டுகளாக பயனாளிகளை உள்வாங்கும் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தற்போது சுமார் 4 ஆயிரத்து 860 கடற்றொழிலாளர்கள் ஓய்வூதியத்தைப் பெற்று வருகின்றனர். தற்போதைய காலச் சூழலுக்கு ஏற்றவகையில் ஓய்வூதியத் திட்டத்தை மீளமைத்து தொடர்ந்து பயனாளிகளை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கடற்றொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஓய்வூதியம் வீட்டுத் திட்டம் தொடர்பாகவும் அமைச்சினால் ஆராயப்பட்டு வருகின்றது. (க)

## செயற்பட்டு மகிழ்வோம்

சாவகச்சேரி, ஜன.31

மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன், மதிப்புறு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத் தலைவர் சி.இரகுநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-131,9)



## முன்னாள் போராளிக்கு வாழ்வாதார உதவி

வவுனியா, ஜன.31

போராட்டத்தில் இடது காலை இழந்த முன்னாள் போராளிக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது.

வவுனியா நெடுங்கேணி இத்திமடு கிராமத்தில் எந்தவிதமான அடிப்படை வசதியுமின்றி வாழும் இவர் வாழ்வாதாரத்துக்காக முச்சக்கரவண்டி ஒன்றை தவணை முறையில் கட்டுப்பணம் செலுத்திபெற்று பயன்படுத்தி வந்தார்.

இதன்போது எதிர்பாராமல் இழக்கப்பட்ட காலில் காயம் ஏற்பட்டதால் சில மாதங்களாக மாத தவணைப்பணம் செலுத்த முடியாமல் பல்வேறு சிரமத்துக்குள்ளானார்.

இந்நிலையில் ஜனனம் நம்பிக்கை மையம் முச்சக்கரவண்டிக்கு செலுத்த வேண்டிய மிகுதிப் பணத்தை செலுத்தி வாழ்வாதாரத்துக்கு உதவி செய்ததாக தெரிவிக்கப்பட்டது. (ஜ-110)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.31

தொல்புரம் மேற்கு மன்னதோட்டம் ஜெகஜோதி அம்மன் ஆலயத்தின் 108 சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

சங்காபிஷேகப் பூசையுடன் மதியம் மகேஸ்வர பூசை நடைபெறும். மாலை வசந்த மண்டப பூசையுடன் ஆரம்பித்து அம்பாள் வீதியுலா இடம்பெறும் என்று ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (க-63)

## மரநடுகை திட்டம்

மூளாய், ஜன.31

யாழ். மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் பயன்தரும் மரங்களை நடுகை செய்வதற்கு துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாட்டின் 72 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு, மரநடுகைக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் பயன்தரும் மரக்கன்றுகள் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-121)

## கைதடியில் பொங்கல் விழா

கைதடி.ஜன.31
கைதடி குமரநகர் சனசமூக நிலையத்தின் பொங்கல் விழா நாளை சனிக்கிழமை இரவு 7.00 மணிக்கு நகுலன் கலையரங்கில் நடைபெறும்.
நிலையத் தலைவர் ச.கோபிசாந் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், இனிய விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ. பிரதாப், கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் அ.செந்தூரன், சிறப்பு விருந்தினர்களாக ஜே/290 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அன்ரன் தேவகுமார், குமரநகர் விளையாட்டு கழகத் தலைவர் க.பஜீவன், குமரநகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி சி. கவிதா, குமரநகர்ச.ச.நிலைய முன்னாள் தலைவர் பா. மோகன் ஆகியோர் கலந்து கொள்வர்.
நிகழ்வில் கற்கோவளம் வேணுகானசபா நாடக மன்றத்தின் அரிச்சந்திரா மயான காண்டம் எனும் இசைநாடகம் மேடையேற்றப்படும். (க-159)

# குடியிருப்புக்கு மத்தியில் மது விற்பனைக்குத் தடை

### கொக்குவிலில் தவறணைகளை அகற்றிவிடுமாறு பணிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 31

**குடியிருப்புக்கு மத்தியில் மதுபானம் விற்பனை செய்வதை நிறுத்துமாறும், குடியிருப்புப் பகுதிகளில் உள்ள மதுபான நிலையங்களை அகற்றுமாறும் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார்.**

**பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் 31ஆம் இலக்க சங்கக் கிளை (தவறணை) பொன்னையா வீதி கொக்குவில் மேற்கில் அமைந்துள்ளது.**

**இது பொதுமக்கள் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ளதால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.**

அங்குள்ளவர்களின் நாளாந்தச் செயற்பாடுகள் மற்றும் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள், அரச ஊழியர்களின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. அந்த வீதியால் பயணிக்க முடியாத நிலையில் நாளாந்தம் குழப்பங்கள் மோதல்கள் ஏற்படுகின்றன.

எனவே அதை அகற்ற வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் உட்பட பல தரப்பினர்களிடமும் மனுவின் பிரதிகளை நல்லூர் பிரதேச செயலாளர், யாழ்ப்பாண மதுவரித்திணைக்கள ஆணையாளர், பனை,தென்னை வள கோண்டாவில் கூட்டுறவுச் சபை, ஜே.99 கிராமஅலுவலர், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பியிருந்தனர்.

இதற்கமைய அந்த மதுபான விற்பனை நிலையத்தை (தவறணை) அகற்றுமாறு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அறிவித்துள்ளது.

கூட்டுறவுத் திணைக்களம் விடுத்துள்ள அந்த அறிவிப்பில் பொது மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளுக்கு குறித்த சங்கம் பொருத்தமான நடவடிக்கை எடுப்பது அவசியம். இத்தகைய பிரச்சினைகளில் பிரதேச செயலகம் கரிசனையுடன் செயற்படுவது அவசியம் என்று குறிப்பிட்டுள்ளது.

எனவே நல்லூர் பிரதேச செயலகம் 31 ஆம் இலக்க கிளை நிலையத்துக்கு (தவறணை) 2020 ஆம் ஆண்டு தைமாதம் வரி அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கு முன்னர் பொருத்தமான வேறு ஓர் இடத்தைத் தெரிவு செய்து அது தொடர்பில் தமக்கு அறிக்கையிடுமாறும் பொருத்தமான வேறு இடத்தைத் தெரிவு செய்யாத பட்சத்தில் 2020 ஆம் ஆண்டுக்குரிய வரி அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என்றும் கோண்டாவில் பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கத்துக்கு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் அறிவித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-20)

# போர் வடுக்களுடனேயே தற்போதும் தமிழர்கள்

### விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையின் தலைவர் தெரிவிப்பு

வவுனியா,ஜன.31
போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்தாலும் வடுக்கள் இன்னும் மாறவில்லை. ரணத்தின் கடுப்போடு தான் எமது மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்று விடுதலை புலிகள் மக்கள் பேரவையின் தலைவர் த.இ.மலரவன் தெரிவித்தார்.

வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"போராளிகளுக்காகவும், மக்களுக்காகவும் நாங்கள் இருக்கின்றோம். எதிர்வரும் தேர்தலை நாங்கள் சந்திக்க இருக்கின்றோம். அதற்காக மாவட்ட இணைப்பாளர்களை ஒருங்கிணைத்து அவர்களூடாக மக்கள் சந்திப்பை நடத்த இருக்கின்றோம். எங்களைப்பற்றி நிறையபேருக்கு விமர்சனங்கள் இருக்கின்றன. நாங்கள் யாரையும் விமர்சிக்கவில்லை. மக்களுக்கான சேவைகளை பொருளாதார ரீதியாகக் கட்டிஎழுப்ப வேண்டிய சூழலில் இருக்கின்றோம். அதற்காகக் கல்வி பொருளாதாரத்தை உள்ளடக்கிய ஒரு தீர்வுத் திட்டத்தை வைத்திருக்கிறோம். ஒவ்வொரு சுதந்திரத்தையும் நாங்கள் போராடித் தான் பெற வேண்டி இருக்கின்றது. ஏனையோர் கூறுவது போல கொள்கை இன்றி பயணிக்கும் கட்சி அல்ல.

தனித்து தன்னிச்சையாக பயணிப்போம் என்பதை நாங்கள் ஒருபோதும் கூறியதில்லை. வடக்கிலே பெரும்பாலான தமிழ் கட்சிகள் இருக்கின்றன. மக்களுக்கான ஒரு நல்ல திட்டம் அமைவதாக இருந்தால் நிச்சயமாக நாங்கள் கலந்தாலோசிப்போம். நாங்கள் எந்தக் கட்சியையும் விமர்சிக்கவில்லை. யாருடனும் கலந்தாலோசிக்க மாட்டோம் அல்லது நாங்கள் இவர்களுடன் போய்பேச மாட்டோம் என்பதை ஒருபோதும் கூறியதில்லை. இதுவரை காலம் தீர்வு திட்டம்என்பது அரசுக்குமட்டும்தான் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர மக்களுக்கான ஒரு தெளிவு இன்று வரைக்கும் யாருக்கும் கிடைத்ததில்லை. நாம் அதை வெளிப்படுத்துவோம். தமிழ்த் தலைமைகள் தமிழ் போராளிகளையும், மக்களையும் கைவிட்டுள்ளார்கள். எமது மக்களும், போராளிகளும் எதிர்பார்ப்புடன் கடந்த பதினொரு ஆண்டு காலமாக வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்குரிய எதிர்பார்ப்பை குறைந்தபட்சம் பூர்த்தி செய்ய முடியாவிட்டாலும் சரி அரசுடன் மக்களுடன் இணைந்து அதைச் செயலாற்றுவதற்கான முயற்சி எடுப்போம். மக்களை முன்னோக்கி செல்ல வேண்டும் என்ற ஒரு காரணத்தால் தான் விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையை உருவாக்கி இதில் பயணம் செய்கின்றோம்- என்றார். (ஐ-110)

## சான்றுப் பொருள்களை பெறவும்

யாழ்ப்பாணம்,ஜன.31
யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம்-கோப்பாய் பொலிஸாரால்பாரப்படுத்தப்பட்ட சான்றுப்பொருள்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன. இந்தச் சான்றுப்பொருள்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் எதிர்வரும் மார்ச் மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கேதீச்சரத்தில் சமூகப் பணிகள்

மன்னார்.ஜன.31
மகா சிவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தில் சமூக பணிகளை மேற்கொள்ள ஆலய மகா சிவராத்திரி மட பரிபாலன சபை ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வருடத்துக்கான சிவராத்திரி உற்சவம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இவ் உற்சவத்துக்கு வருகை தரும் பக்தர்களுக்கு உற்சவ தினத்துக்கு முதல் நாளும், உற்சவ தினத்தன்றும் அதற்கு மறுநாளும் வழமைபோல அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதியுதவியை பாடசாலைகள், நிறுவனங்கள், திணைக்களங்கள் போன்றவற்றிடமிருந்தும் மகா சிவராத்திரி மட பரிபாலன சபையினர் கோரியுள்ளனர்.

இந்தப் பணிக்கு நிதியுதவி செய்ய விரும்புவோர் திருக்கேதீச்சர மட பரிபாலனசபையின் இலங்கை மத்திய வங்கியின் மன்னார் கிளையில் கணக்கு இலக்கம்0084367358 இற்கு அல்லது சி.குணபாலன், தலைவர் மகா சிசாரத்திரி மடசெயலாளர் மாவட்ட செயலகம் மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பரிபாலன சபை அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-69)

# ரூ.1,000 வழங்காவிடில் தோட்டங்கள் அரசுக்கு

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, ஜன.31
தோட்ட தொழிலாளர்களுக்குத் தோட்ட நிர்வாகங்கள் ஆயிரம் ரூபா சம்பளத்தைக் கொடுக்கத் தவறினால் தோட்டங்களை அரசு பொறுப்பேற்கும் என்று உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை அரச தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர்களுடனான சிறப்புச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:
முன்னர் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும் சேவைகளுக்காக நிலுவையாக 13 பில்லியன் ரூபா ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. கடந்த அரசின் காலப்பகுதியில் முறையற்ற நிதி முகாமைத்துவத்தின் காரணமாகவே இந்த நிலுவை ஏற்பட்டுள்ளது. இதற்காக குறை நிரப்பு பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் விரையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. தோட்டங்கள் அரசுக்கே சொந்தமானவை. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.
அதைத் தோட்ட நிர்வாகங்கள் நிறைவேற்றத் தவறினால் தோட்டங்களைப் பொறுப்பேற்று அவை இளைஞர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும். தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வேதன அதிகரிப்பில் அரசு உறுதியாக உள்ளது.-என்றார். (எ)

## சட்ட மா அதிபருடன் சபாநாயகர் சந்திப்பு

கொழும்பு, ஜன.31
சட்டமா அதிபர் தப்புல டி.லிவேராவுக்கும், சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கும் இடையே நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று நடந்துள்ளது.
சட்டமா அதிபர் தப்புல டி.லிவேரா அண்மையில் நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவைக் கைதுசெய்ய வேண்டும் என அறிவித்திருந்த நிலையில் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியினர் அது தொடர்பாகத் தமது கடுமையான கருத்துக்களைப் பதிவு செய்திருந்தனர். அரசமைப்பு பேரவையிலும் இது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.
கடந்த வெள்ளிக்கிழமை நடந்த அரசமைப்புப் பேரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டமைக்கு அமைய சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கும், சட்டமாஅதிபர் தப்புல டி.லிவேராவுக்கும் இடையே இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.
இந்தக் கலந்துரையாடலில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் தொடர்பாகச் சட்ட மா அதிபர் விரிவான விளக்கத்தை சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் வழங்கியிருந்தார்.
சட்ட மாஅதிபரால் வழங்கப்பட்ட விரிவான விளக்கத்தையடுத்து, சட்டமா அதிபர்திணைக்களத்தின எதிர்கால நடவடிக்கைகளின் போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு முக்கியத்துவம் அளிப்பது தொடர்பில் சபாநாயகரும், சட்ட மா அதிபரும் இணங்கிக் கொண்டனர் என்று கூறப்படுகின்றது. (எ)

## கால்கோள் விழா

யாழ்ப்பாணம்.ஜன.31
நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய கால்கோள் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.
வித்தியாலய அதிபர். ஏ.ரி.ரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், விருந்தினர்களாக யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தர்மிகா மோகராஜ், யாழ்.பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் இந்துமதி வரதராஜன் மற்றும் மருதடி ஜே/77 கிராம உத்தியோகத்தர் மரிட்டா ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொள்வர்.
நிகழ்வில் தரம் 1 மாணவர்களை தரம் 2 மாணவர்கள் வரவேற்பர். பாலர் பிரிவு மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறும். வித்தியாலயத்தின் சார்பில் ஒவ்வொரு மாணவருக்கும் வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்படும். (க-69)

## வாசிப்பு மாத பரிசளிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.31
வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்கள் பணிமனையால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற்றது.
யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் கதீஜா கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 'நிறைவான வாழ்வுக்கு வாசிப்பின் அவசியம்' என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டது.
இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வே நடைபெற்றது.
நிகழ்வில் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் சேகு ராஜிது, யாழ்ப்பாணம் கதீஜா கல்லூரி அதிபர் ஏ.சி. ஜான்ஸி சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (ஐ)

## ஆபத்துக்கு 'மாஸ்க்' என்றால் அது கூட 'மேட் இன் சைனா'!

கிளிநொச்சி, ஜன. 31
தற்போது 'கொரோனா' வைரஸ் பரவுகின்றது. பாதுகாப்புக்காக முகக் கவசம் (மாஸ்க்) வாங்குமாறு தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், சுகாதார ஆபத்து எனக்கூறி பாதுகாப்புக்குக் கொள்வனவு செய்யும் அது கூட 'மேட் இன் சைனா' என்றே உள்ளது. இது அடுத்த மன உளைச்சலாகவுள்ளது.
இவ்வாறு ஓய்வுபெற்ற அதிபர் க.இராசேந்திரம் தெரிவித்தார்.
கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை அதிபர் ந.சிவநேசன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினர் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:
உலகின் எந்தப் பாகத்தில் என்ன ஆபத்து ஏற்பட்டாலும் முதலில் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களாகவே இருப்பர். எனவே என்ன விலை கொடுத்தாவது ஆபத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைமையில் உள்ளோம். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற நிலைபோய் என்ன விலை கொடுத்தாலும் கல்வியைப் பெற்றே ஆகவேண்டிய நிலைமையிலேயே எமது மாணவர்கள் உள்ளனர். ஒருதசாப்தத்துக்கு முன்னர் ஷெல்லடி, குண்டு வெடிப்பு, கிளைமோர் என எமது மாணவர்கள் பாதிப்படைந்தனர். கடந்த ஆண்டு ஈஸ்ரர் குண்டுத் தாக்குதலால் அச்சம் காரணமாக பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டன. முகத்தை மூடிச் சென்றவர்களையும் முகத்தை திறவென்றோம். இந்த ஆண்டு முகத்தை மூடு என்கின்றோம். சுகாதார நிலைமை அப்படியுள்ளது.
அதனால் 'மாஸ்க் வாங்குமாறு தெரிவிக்கப்படும் அறிவுறுத்தலுக்கு சீனா சுகாதார ஆபத்து எனக்கூறி பாதுகாப்புக்குக் கொள்வனவு செய்யும் 'மாஸ்க்' கில் 'மேட் இன் சைனா' என்றே உள்ளது. அது அடுத்த மன உளைச்சலாகவுள்ளது- என்றார் (த-105)

## பொன்னாலைக்கு கிராம செயலகம்

### திங்களன்று அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 31
பொன்னாலை கிராம அலுவலர் பிரிவுக்கென கிராம செயலகம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை பொன்னாலை சிறிய குளத்துக்கு அண்மையில் உள்ள திடலில் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தக் கிராமத்தில் பணியாற்றும் அனைத்து கிராம மட்ட அலுவலர்களும் ஒரே கூரையின் கீழ் இருந்து சேவையாற்றக் கூடிய வகையில் இந்தக் கிராமசெயலகம் அமைக்கப்படவுள்ளது.
இதற்கான நடவடிக்கைகளை வலி.மேற்குப் பிரதேச செயலகம் மேற்கொண்டுவருகிறது.
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஊடாக கிடைக்கப்பெறும் நிதி அனுசரணையில் இந்தக் கிராம செயலகம் அமைக்கப்படவுள்ளது.
சுமார் 35 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்தக் கிராம செயலகக் கட்டத்தில் அலுவலர் களுக்கான அறைகள் மற்றும் பொது மண்டபம் ஆகியனவற்றுடன் கிராம மட்ட அமைப்புக்கான இடவசதியும் உள்ளடக்கப்பட்டிருக்கும். (த-121)

## கடலில் வீசப்பட்ட கஞ்சாப் பொதிகள்

### மெரைன் பொலிஸாரால் மீட்பு



மன்னார்,ஜன.31
கடத்தல்காரர்கள் இலங்கைக்குக் கடத்திக் கொண்டு வந்த கஞ்சாப் பொதிகளை, பொலிஸாரைக் கண்டதும் கடலில் வீசியுள்ளனர். அவற்றை 'மெரைன்' பொலிஸார் நேற்று வியாழக்கிழமை மீட்டனர்.
இராமேஸ்வரம் அருகே தனுஸ்கோடி சேரான்கோட்டைக் கடற்கரைப் பகுதியிலிருந்து இலங்கைக்கு கேரளா கஞ்சா கடத்த இருப்பதாக 'மெரைன்' பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.
அதனையடுத்து கடலோரக் காவல் பொலிஸ் ஆய்வாளர் கனகராஜ் மற்றும் சார்பு ஆய்வாளர் ராஜ் குமார் தலைமையில் 20க்கும்மேற்பட்ட பொலிஸார் நான்கு குழுக்களாகப் பிரிந்து கடற்கரைப் பகுதிகளில் ரோந்து நடவடிக்கை மேற்கொண்டனர்.
படகில் இருந்த நபர்கள் சிலர் பொலிஸாரைக் கண்டதும் படகில் இருந்த பொதிகளைக் கடலில் வீசி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். 'மெரைன்' பொலிஸார் தப்பிச் சென்ற படகைப் பிடிக்கக் கடலுக்குள் விரைந்தனர். படகு சற்று நேரத்தில் மாயமானது. கடலில் இருந்து வீசப்பட்ட பொதிகளைக் கைபற்றிய 'மெரைன்' பொலிஸார் அவற்றைச் சோதனையிட்டனர். அவற்றில் கஞ்சா இருப்பது தெரிய வந்தது. சுமார் 8 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது.
கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்ட முக்கிய குற்றவாளிகள் தொடர்பாக ராமேஸ்வரம், தனுஸ்கோடி மற்றும் கீழக்கரை பகுதிகளில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (க-56)

# சுமந்திரன் கொலை முயற்சி: 15 பேருக்கும் மறியல் நீடிப்பு

**கொழும்பு, ஜன. 31**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள 15பேரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.**

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் பாதாள உலகக் குழுவினரே இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் கொழும்பு நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டபோதே, இவர்களின் விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டது.**



தெற்கிலுள்ள பாதாள உலகக் குழுவினருடன் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராகச் செயற்படும் தமிழ் அரசியல்வாதிகளைக் கொல்வதற்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இவ்வாறு திட்டம் தீட்டினர் எனத் தெரிவித்து புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினரான ஜெகதீஸ்வரன் வேலுப்பிள்ளை உள்ளிட்ட சிலரைகொழும்புகுற்றத்தடுப்புப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்வதற்கு பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கார்த்திக்சுலக்ஷ்குமார் என்ற சந்தேகநபர் கிளிநொச்சிப் பேருந்து நிலையத்திலிருந்து கிளைமோரை காருக்குள் கொண்டுசென்றார் எனப்பொலிஸார் மன்றில் குறிப்பிட்டனர்.

வழக்கின் முக்கிய சந்தேகநபரான பிரான்சிஸ் சர்வியன் அல்லது டட்லி அல்லது வேந்தன் என்ற பெயர் கொண்டவரின் வங்கிக் கணக்குக்கு பெருந்தொகைப் பணம் வைப்பில் இடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பாக 15 வங்கிகளில் இவரின் கணக்குத் தொடர்பான அறிக்கையொன்றை பெறவுள்ளதாக மன்றில் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் அநேகமானவர்கள் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் எனவும் இவர்கள் கொலை கொள்ளை போன்ற குற்றங்களுக்காக தற்போது சிறையில் இருக்கும் பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புபட்டே செயற்பட்டனர் எனப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

இந்தச் சந்தேக நபர்கள் போரின் போது விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களைத் தோண்டி எடுத்துள்ளனர் எனவும் அவற்றில் ஒரு கிளைமோர் மற்றும் இரண்டு பிஸ்டல்களும் அவற்றுக்கான துப்பாக்கி ரவைகளையும் தாங்கள் கைபற்றினர் எனப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். (ஒ -5)

# மின் தடை

யாழ்ப்பாணம்,ஜன.31

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்றும் நாளையும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை **வவுனியா மாவட்டத்தில்** அவுசதப்பிட்டிய கிராமம், மகாறம் பைக் கிராமம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்**, நாவலர் வீதி கனகரட்ணம் சந்தியிலிருந்து நல்லூர் செட்டித்தெரு வரை,பாரதி வீதி,புறூடி வீதி, நொத்தாரிஸ் லேன்,நல்லூர் குறுக்கு வீதி, பாலாவோடை இணுவில், உடுவில், சங்குவேலி, புதுமடம், கட்டுடை, மல்வம், கல்வயல்,மட்டுவில் முத்துமாரி அம்மன் கோவிலடி, சந்திரபுரம், சரசாலை, கனகம்புளியடிச்சந்தி, நாவற்குழி, கோகிலாக்கண்டி, தச்சன் தோப்பு, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, கைதடி, நுணாவில், பனை அபிவிருத்திச் சபை, சித்த மருத்துவ பீடம், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம், காக்கைதீவு, பொன்னாலை பிரதேசம், காரைநகர் சிவன்கோவிலடி, காரைநகர் கடற்கரை, இலகடி, வலந்தலை, புது வீதி, ஆலடி, கருங்காலி, மருதபுரம், காரைநகர் கோவளம், கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடி சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதி சந்தியிருந்து ஸ்ரான்லி வீதி சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி வரை, அசாத் வீதி, பி.ஏ.தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப்புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி,சிவன்பண்ணை வீதி, காதி அபூபக்கர் வீதி, ஹரிகரன் அச்சகம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி மாவட்டத்தில்** கனகபுரம், அம்பாள்குளம், உதயநகர், உருத்திரபுரம், ஜெயந்திநகர், முத்துவிநாயகபுரம், உருத்திரபுரம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)



முல்லைத்தீவு அலைகல்லுப்போட்டகுளம் அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கான வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் திறனாய்வுப் போட்டிகள் நேற்று நடைபெற்றன. (க-222)

# சனசமூக நிலையம் மீளப் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.31

போரில் அழிவடைந்து செயற்பாடின்றி இருந்த பலாலித் தெற்கு வயாவிளான் சென் ஜேம்ஸ் சனசமூக நிலையம், தற்போது சொந்த இடத்தில் மீளப் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. அந்தப் பகுதி மக்களின் நிதி உதவியில் தற்காலிகக் கட்டடத்தில் நிலையம் புனரமைக்கப்பட்டுள்ளது. அதற்கென புதிய நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளாக இலைமறைகாயாகச் செயற்பட்டு வந்த இந்த சனசமூக நிலையம் பல்வேறு நெருக்கடி நிலைகளிலும் கல்வியில் வீசேட சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவித்தல், உள்ளிட்ட கிராம மக்களின் தேவைகளை நிறைவேற்றி வந்தது.

நீண்ட காலமாக நிரந்தரக்கட்டடம் அமைக்கப்படாமலிருந்த சனசமூக நிலையம் தற்போது அதன் செயற்பாட்டை விரிவாக்கம் செய்யும் நோக்குடன், முன்னாள் நிர்வாக சபை உறுப்பினர்களின் முயற்சியில் தற்காலிகமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. தற்போது இளைய தலைமுறையினரிடம் நிர்வாகப் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. (க)

# மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.31

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல்1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்) ஞா.ந.ஆதவன் கலந்து கொள்வர். (க-63)

+++

கரணவாய்,ஜன.31

கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிக்ள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பொலிகை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் அ.பவானந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

+++

அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் ஐ.தேவ ஈஸ்வரன் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய சமய பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே.கமலேஸ்வரன், மதிப்புறு விருந்தினர்களாக வித்தியாலய ஓய்வுநிலை அதிபர்களான செல்வி.தி.வேலுப்பிள்ளை, திருமதி க.யோகநாதன். ஓய்வுநிலை ஆசிரியை திருமதி ம.இராசேந்திரம் ஆகியோர் கலந்து கொள்வர். (க-108-131)

# கலந்துரையாடலும் ஏற்பாட்டுக் கூட்டமும்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆல்ய மகோற்சவம் மார்ச் மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு ஆலய உபயகாரர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கும், திருவிழா தொடர்பான முன் ஏற்பாட்டுக் கூட்டம் பிற்பகல் 3 மணிக்கும் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன என்று பெறுநர் குழு சார்பில் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ)

# முல்லை. மருத்துவமனைக்கு தற்காலிகமாக மருத்துவர்

## மக்கள் போராட்டத்தை அடுத்து நடவடிக்கை

முல்லைத்தீவு, ஜன. 31

முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள பிரதேச மருத்துவமனையின் மருத்துவர் பிரச்சினைக்குத் தீர்வு கோரி முன்னெடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை அடுத்து, தற்காலிகமாகத் தீர்வு கிடைத்துள்ளது.



மருத்துவர் பிரச்சினையைத் தீர்க்கக் கோரி, முல்லைத்தீவு நகர மற்றும் கரையோர மக்கள் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு முன்பாக நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருடன் பேசி முடிவுகளைப் பெறுவோம் என்று அதிகாரிகள் வாக்குறுதி வழங்கினர். எனினும் மருத்துவர் நியமிக்கப்படும் வரை தொடர் போராட்டமாக இங்கே அமர்ந்திருந்து போராடுவோம் என்று மக்கள் உறுதியாகத் தெரிவித்த நிலையில் முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தது. உடனடியாகவே போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகை தந்த வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆர்.கேதீஸ்வரன், போராட்டத்தில் ஈடுபட்ட சிலரை அழைத்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

கலந்துரையாடலின் இறுதியில் ஏற்கனவே பிரதியீடு இல்லாமல் இடமாற்றம் செய்யப்பட்ட மருத்துவர் உடனடியாக மீளநியமிக்கப்படுவார். 24 மணித்தியால சேவையை வழங்கும் வகையில் மேலும் ஒரு மருத்துவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையிலிருந்து வரவழைக்கப்பட்டு நியமிக்கப்படுவார். இந்த இரண்டு நியமனங்களும் உடனடியாகவே வழங்கப்படும். பெப்ரவரி மாதம் நிரந்தர மருத்துவர்கள் நியமனம் இடம்பெறும் வரை இந்த நடவடிக்கை தற்காலிகமானதாகச் செயற்படுத்தப்படும். பிரதேச மருத்துவமனையின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக மருத்துவமனை அபிவிருத்திக் குழு அமைக்கப்படும் என்று பணிப்பாளர் உறுதிமொழி வழங்கினார்.

அதனையடுத்து மக்களின் தொடர்போராட்டம் கைவிடப்பட்டது. மக்களின் போராட்டத்துக்கு முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் ,பொதுச் சந்தை அனைத்தும் மூடப்பட்டு பூரண ஆதரவு வழங்கப்பட்டது. மேலும் கடற்றொழிலாளர்கள் எவரும் கடலுக்குச் செல்லவில்லை. இதனால் முல்லைத்தீவு நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு246-19)



## அம்மாச்சியை இடம்மாற்ற வேண்டாமெனக் கோரிக்கை

தலைமன்னார், ஜன. 31

மன்னார் அம்மாச்சி உணவகத்தை விவசாய திணைக்களத்திடமிருந்து மன்னார் நகர சபைக்கு மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது என்று தெரிவித்துள்ள மன்னார் விவசாய மகளிர் சங்கத்தினர், அவ்வாறு மாற்றுவதற்கு ஆட்சேபனை தெரிவித்து வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோருக்கு மனுக்கள் கையளித்துள்ளனர்.

மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் பாரம்பரிய உணவுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் உணவகமாக அம்மாச்சி உணவகம் உள்ளது. இது மூன்று இலக்குகளை நோக்காகக் கொண்டது.

வருமானம் குறைந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், நலிவடைந்த வருமானமுடைய குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு வகை செய்தல், உள்ளூர் உற்பத்தியாளர்களின் விவசாய உற்பத்திக்கான சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தல், ஆரோக்கியமான பாரம்பரிய உணவுகளை வழங்குதல் என்பனவே அவை. மாவட்டச் செயலகத்துக்கு எதிர்ப்புறமாக இந்த உணவகம் சிறப்பாக இயங்கி வருகின்றது.

தற்போது சுமார் 21 பெண்கள் இந்த உணவகத்தில் உணவு உற்பத்தி மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளனர். 25 க்கும் மேற்பட்ட பெண்கள் இதர உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதனூடாகப் பயனடைகின்றனர். இவர்களின் வாழ்வாதாரம் இந்த உணவகத்தின் வருமானத்திலேயே தங்கியுள்ளது.

எதிர்காலத்தில் மேலும் 20 பெண்களால் அதிகரிக்க வாய்ப்புள்ளது. வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

இலங்கை முழுவதும் இத்தகைய உணவகங்கள் விவசாயத் திணைக்களத்திடமே உள்ளன. மன்னாரில் மட்டும் மாற்ற முயற்சிக்கின்றனர்.

எனவே எங்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க அம்மாச்சி விவசாயத் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் மனுவில் வலியுறுத்தியுள்ளனர். (த-60)

## பாரதி விழா

யாழ்ப்பாணம், ஜன. 31

இந்தியத் துணைத் தூதரகத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் பாரதிவிழா மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் விழா நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மூத்த கவிஞர் சோ. பத்மநாதன் "தமிழ்க் கவிதையில் பாரதியின் பாட்சி" என்ற பொருளில் சிறப்புரை யாற்றுவார். (ஐ)

## சீனர்கள் தங்கியுள்ளதால் பாடசாலை செல்லத் தயக்கம்

### தென்மராட்சியில் இப்படியும் சம்பவம்

சாவகச்சேரி, ஜன. 31

கொரோனா வைரஸ் பற்றிய தகவல் பரவும் நிலையில், பாடசாலைக்கு அருகில் சீனர்கள் தங்கியிருக்கின்றனர் என்ற காரணத்தால் பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப தயக்கம்காட்டிவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் ஒரு பாடசாலையில் கற்கும் பிள்ளைகளின் பெற்றோரே இவ்வாறு தயக்கம் காட்டுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. தனியார் கட்டடத்தில் தென்மராட்சியில் தண்ணீர்க் குழாய் பொருத்தும் பணியில் சீனர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தங்கியிருப்பது, அந்தப் பாடசாலைக்கு அருகில் உள்ள தனியார் கட்டடத்திலேயே. இதுவரை காலமும் எந்தச் சிக்கலும் ஏற்பட்டிருக்கவில்லை.

தற்போது கொரோனா வைரஸ் சீனாவில் பலரது உயிர்களைப் பறித்து பீதி ஏற்படுத்தியுள்ள நிலையில், சீனர்கள் அந்தப் பாடசாலைக்கு அருகில் வசிக்கின்றமையால் இந்த நிலைமை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)






யாழ்ப்பாணம் நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்பாள் ஆலய திரிதள இராஜகோபுர மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நேற்று வியாழக்கிழமை காலை வெகுவிமரிசையாக இடம்பெற்றது.

படங்கள்: ஐ.சிவசாந்தன். (க)

# 1 1/2 கோடி பெறுமதியான கஞ்சா யாழில் சிக்கியது



**யாழ்ப்பாணம், ஜன. 31**

**யாழ்ப்பாணம் சுண்டுக்குளியிலுள்ள வீடு ஒன்றிலிருந்து 142 கிலோ 945 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அதை பதுக்கி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் 33 வயதுடைய குடும்பத் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.**

சுண்டுக்குளி, பழைய பூங்கா வீதியிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினமிரவு அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் சிறப்பு பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் வீட்டை முற்றுகையிட்டுச் சோதனை நடத்தி அதை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கஞ்சாவின் பெறுமதி சுமார் ஒரு கோடியே 50 லட்சம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கொழும்பில் வசித்துவிட்டு திருமணத்தின் பின் இங்கு வசித்து வருகிறார் என்றும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தவென்று அவர் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சு-26)

## சைக்கிள் திருட்டு

பூட்டிவிட்டு வகுப்புக்குச் சென்ற மாணவனின் புதிய துவிச்சக்கரவண்டி திருட்டுப்போயுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நுணாவில் பகுதியைச் சேர்ந்த மாணவன் சாவகச்சேரி நகரப்பகுதியில் உள்ள கணினிப் பயிற்சி நிலையத்தில் வகுப்புக்குச் செல்வதற்காக பாதுகாப்பான இடத்தில் துவிச்சக்கரவண்டியை விட்டுச் சென்றுள்ளார்.

வகுப்பு முடிந்து ஒரு மணிநேரத்துக்கு பின்னர் வெளியே வந்து பாத்தபோது துவிச்சக்கரவண்டி காணாமற் போயுள்ளமை தெரியவந்துள்ளது. (ஐ-9)

## போதைப்பொருள் பாவனைக்கு எதிராக யாழில் நடைபவனி




யாழ்ப்பாணம், ஜன. 31

மகாத்மா காந்தியின் நினைவு நாளையொட்டி போதைப் பாவனைக்கு எதிரான காந்தி நடைபவனி நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் அதன் கொன்சியூலர் எஸ்.பாலச்சந்திரன் தலைமையில் இது நடைபெற்றது.

அரியாலை காந்தி சனசமூக நிலையத்தில் உள்ள காந்தி திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்ட பின்னர் ஆரம்பித்த நடைபவனி யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்திலுள்ள காந்தி திருவுருவச் சிலையை வந்தடைந்தது.

நிகழ்வில் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், யாழ்ப்பாணமாநகர முதல்வர் இ.ஆனல்ட், யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், அருட் சகோதரர்கள், மதகுருமார்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தனர். (து)

## மெய்வன்மை போட்டிகள்

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் கி.விக்னராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சிக் கல்வி வலய கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பா.வாசுதேவன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி சிவநகர் அ.த.க பாடசாலையின் ஓய்வு நிலை அதிபர் ஐ. இராஜரட்ணம், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.அநுராகாந்தன், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட சுற்றாடல் அலுவலர் ப.துவாரகன், மன்னார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வா.ஜெயச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)

*** *** ***

காரைநகர் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். கல்லூரி அதிபர் அ.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பி.ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினராக காரைநகர் பிரதேச செயலக ஆளணி உதவியாளர் எம்.அன்ரன் ஜேசுதாஸ், கௌரவ விருந்தினராக பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளைப் பொருளாளர் மா.கனகசபாபதி ஆகியோர் கலந்து கொள்வர். (க-250)

*** *** ***

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் திருமதி. சுந்தரபாரதி சிவமலர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதார உத்தியோகத்தர் இராசரத்தினம் றெனோஜ், சிறப்பு விருந்தினராகத் தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை ஆசிரியர் திருமதி. ஸ்ரீகௌரி குமணன் ஆகியோர் கலந்து கொள்வர். . (க)

## கிளிநொச்சி அதிரடிச் சோதனை; கசிப்பு பரல்கள் மீட்பு



கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் 4 இடங்களில் நடத்திய அதிரடிச் சோதனையில் 7 பரல்களிலும் 80 சொப்பிங் பைகளிலும் கசிப்பு போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொதுமக்களும் பொலிஸாரும் இணைந்து இதை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கிராமத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸாருடன் இணைந்து கிராம மக்களும் ஈடுபட்டு அவற்றை மீட்டனர்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்ட பரிசோதகர் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சாந்தபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் அண்மையில் மேற்கொண்ட கலந்துரையாடலில் சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றமை பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பதிலளித்த அந்தக் கிராமத்தைச் சேர்ந்தோர் எமது கிராமத்தில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாகக் கூறுகின்றீர்கள். ஆனால் அவ்வாறு விற்பனை செய்யப்படுவதை விற்பனையாளர்களுக்கு விநியோகிப்பது யார் எனக் கூறவில்லை. ஏனெனில் அங்கு கசிப்பு கொண்டுவந்து விநியோகிப்பவர்களே பொலிஸார்தான் என்று குற்றம் சாட்டினர்.

கசிப்பு விற்பனை செய்தவரைப் பொலிஸார் கைதுசெய்த போது அவரைக் கொண்டுசெல்ல விடாமல் தடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றதே என்று பொலிஸ் அதிகாரி வினவ, இங்கு கசிப்பைக் கொண்டுவந்து விநியோகிப்போர் பொலிஸார்தான் என்றும் தெரிவித்தனர்.

இவற்றை எதிர்காலத்தில் சரிசெய்ய முயற்சிக்கின்றேன் என்று பொலிஸ் அதிகாரி கூறியுள்ளார். (து-105)

# பொதுமன்னிப்பு காலம் அறிவித்தது கொரியா

கொழும்பு, ஜன.31

தென்கொரியாவில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் தொழிலாளர்கள் தண்டப்பணம் மற்றும் தண்டனையின்றி தமது நாடுகளுக்குத் திரும்புவதற்கான பொது மன்னிப்பு காலத்தை அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

2019 டிசம்பர் 11 ஆம் திகதிமுதல் 2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை இந்தப் பொது மன்னிப்புக்காலம் நடைமுறையில் இருக்கும்.

விசா காலம் நிறைவடைந்து சட்டவிரோதமாக தென்கொரியாவில் தங்கியிருக்கும் நபர்கள் இந்த பொதுமன்னிப்பு காலப்பகுதியில் பயணச் சீட்டு, தன்னார்வ அறிக்கை மற்றும் தங்குமிட பாஸ் ஆகியவற்றை பிரதேசத்தில் அமைந்துள்ள குடிவரவு அலுவலகத்தில் சமர்ப்பித்த பின்னர், எவ்விதத் தண்டமும் இன்றி இந்த நாட்டில் இருந்து வெளியேற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த நபர்கள் தடுப்புப் பட்டியலிலும் இணைக்கப்பட மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து தென்கொரியாவுக்கு பணிக்குச் சென்று வீசா காலம் முடிவடைந்து சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள் இந்த பொது மன்னிப்புக் காலத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு அங்குள்ள இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது. இதனை உறவினர்கள் தமது சொந்தங்களுக்குத் தெரியப்படுத்த நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(எ-24)

# பிறப்பு, இறப்பு பதிவுகள் குடாநாட்டில் அதிகரிப்பு

## ஆனால் திருமணப் பதிவுகள் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 31

**யாழ்ப்பாண மாவட்டத்தில் 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு பதிவுகள் அதிகரித்துள்ளன. ஆனால் திருமணப் பதிவுகள் பெரும் வீழ்ச்சியடைந்துள்ளன.**

2018ஆம் ஆண்டு 9 ஆயிரத்து 159 பிறப்புப் பதிவுகள் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது 2019ஆம் ஆண்டு 9 ஆயிரத்து 813 ஆக அதிகரித்துள்ளன.

2018ஆம் ஆண்டு இறப்புப்பதிவுகள் 4 ஆயிரத்து 474 மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது 2019ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 952 ஆக அதிகரித்துள்ளன. இதேவேளை திருமணப் பதிவுகள் 2018ஆம் ஆண்டு 5 ஆயிரத்து 829 ஆகக் காணப்பட்டன. 2019 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 875 ஆகக் குறைவடைந்துள்ளன.

**பிறப்பு**

2019ஆம் ஆண்டு பிறப்புப் பதிவுகள், யாழ்ப்பாண பதிவாளர் அலுவலகத்தில் 3, நெடுந்தீவில் 4, வேலணையில் 100, ஊர்காவற்றுறையில் 18, காரைநகரில் 10, யாழ்ப்பாணத்தில் 6 ஆயிரத்து 890, நல்லூரில் 1, சண்டிலிப்பாய் 3, சங்கானையில் 24, உடுவிலில் 5, தெல்லிப்பழையில் ஆயிரத்து 471, கோப்பாயில் 30, சாவகச்சேரி 65, கரவெட்டியில் 4, பருத்தித்துறையில் ஆயிரத்து 184, மருதங்கேணியில் ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**இறப்பு**

இறப்புப் பதிவுகள், யாழ்ப்பாண பதிவாளர் அலுவலகத்தில் 10, நெடுந்தீவில் 28, வேலணையில் 64, ஊர்காவற்றுறையில் 40, காரைநகரில் 82, யாழ்ப்பாணத்தில் 2 ஆயிரத்து 150, நல்லூரில் 162, சண்டிலிப்பாயில் 227, சங்கானையில் 226, உடுவிலில் 207, தெல்லிப்பழையில் 360, கோப்பாயில் 381, சாவகச்சேரி 362, கரவெட்டியில் 237, பருத்தித்துறையில் 375, மருதங்கேணியில் 41ம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**திருமணம்**

திருமணப் பதிவுகள், யாழ்ப்பாண பதிவாளர் அலுவலகத்தில் 90, பருத்தித்துறை பதிவாளர் அலுவலகத்தில் 20, நெடுந்தீவில் 23, வேலணையில் 72, ஊர்காவற்றுறையில் 59, காரைநகரில் 83, யாழ்ப்பாணத்தில் 387, நல்லூரில் 771, சண்டிலிப்பாயில் 409, சங்கானையில் 388, உடுவிலில் 351, தெல்லிப்பழையில் 465, கோப்பாயில் 587, சாவகச்சேரியில் 572, கரவெட்டியில் 332, பருத்தித்துறையில் 37, மருதங்கேணியில் 229ம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஒ.5)

# சுதந்திர தினப் பயணம் யாழ். நோக்கி ஆரம்பம்



கொழும்பில் தனியொருவர் ஆரம்பித்த சுதந்திர தின சமாதான துவிச்சக்கர வண்டிப் பயணம் நேற்றுமுன்தினம் மன்னாரை வந்தடைந்தது. அவர் சிறிது நேரத்தில் அங்கிருந்து யாழ்ப்பாணம் பருத்தித்துறையை நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளார். மன்னாரிலிருந்தான பயணத்தை மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் நேற்றுக்காலை 8.15மணி அளவில் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக செயலர், மன்னார் பிரதேச செயலர், வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸ் அதிகாரி உட்படப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

நித்தம்புவ பகுதியைச் சேர்ந்த ஜீ.எச்.பீரிஸ் என்பவரே கொழும்பிலிருந்து இந்தப் பயணத்தை கடந்த 28 ஆம் திகதி ஆரம்பித்திருந்தார். நேற்றுமுந்தினம் மன்னாரை வந்தடைந்திருந்தார். இலங்கையின் 72 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தப் பயணத்தை ஆரம்பித்தேன் என்று அவர் கூறுகின்றார்.

பருத்தித்துறையை வந்தடையும் துவிச்சக்கர வண்டிப் பயணம் அங்கிருந்து முல்லைத்தீவு, திருகோணமலை சென்று மீண்டும் கொழும்பை நோக்கிப் பயணிக்கவுள்ளேன். கொழும்பு சுதந்திர சதுக்கத்துக்குச்சென்று தனது பயணத்தை நிறைவு செய்யவுள்ளேன் என்று அவர் மேலும் கூறியுள்ளார். இலங்கையின் சுதந்திர தினமாக பெப்ரவரி 4 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகின்றது.

தொடர்ச்சியாக 10 ஆவது வருடமாக சுதந்திர தின சமாதான துவிச்சக்கர வண்டிப் பயணத்தை மேற்கொண்டு வருகின்றேன் என்றும் அவரே கூறுகின்றார். (து-56)

# நெல் கொள்வனவு ஆரம்பம்

வவுனியா.ஜன.31

நாடளாவிய ரீதியில் விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ நெல் 50 ரூபாவுக்கு நெல் சந்தைப்படுத்தும் சபையால் கொள்வனவு செய்யும் செயற்றிட்டம் வவுனியாவில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன தலைமையில் நெல் சந்தைப்படுத்தும் சபையில் கொள்வனவு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்துக்காக 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்து வவுனியாவில் உள்ள பல்வேறு களஞ்சியசாலைகளிலும் களஞ்சியப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் சுமார் 45 ஆயிரம் ஏக்கரில் நெல் செய்கை பண்ணப்பட்ட நிலையில், இம் முறை அதிகளவில் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வன்னி கட்டளைத்தளபதி போபித தர்மசிறி, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் தர்மபால செனவிரத்ன, மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார், பிரதேச செயலாளர் ந. கமலதாசன், விவசாயத் திணைக்களத்தின் அதிகாரி சகிலாபானு உட்பட அரச அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றத்தின் உறுப்பினர்கள், விவசாய சம்மேளனத்தின் தலைவர் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



(க-110)

# சமாதான தீபம் மலர் வெளியீடும் மதிப்பளிப்பும்

வட இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் சமாதான தீபம் மலர் வெளியீடும், குருதிக் கொடையாளர்கள் மற்றும் மூத்த சமாதான நீதிவான்கள் மதிப்பளிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன. சங்கத் தலைவர் கலாநிதி. கா.பீ. ஜெயவிந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கடற்றொழில் மற்றும். நீர்வள மூலங்கள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் உட்பட பலர் க்லந்து கொள்ளவுள்ளனர்.

சங்கத்தின் சமாதான தீபம் நூலின் முதற் பிரதியை கலாநிதி இராஜேஸ்வரி செல்லத்துரை பெற்றுக்கொள்வார். வெளியீட்டுரையை யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரிஓய்வுநிலைமூத்தவிரிவுரையாளர் மு.கௌரிகாந்தனும், நயப்புரையை யாழ்ப்பாண தேசியகல்வியியற் கல்லூரி மூத்த விரிவுரையாளர் திருமதி. ஜெயலட்சுமி உதயகுமார் ஆகியோரும் நிகழ்த்துவர். நிகழ்வில் சங்கத்தின் மூத்த சமாதான நீதிவான்கள் 60 பேரும், குருதிக் கொடையாளர்கள் 40 பேருமாக 100 பேருக்கு விருது வழங்கப்படவுள்ளது.

(ஜ-9)

# திறன் வகுப்பறை திறப்பு விழா

காரைநகர், ஜன.31

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். பாடசாலை அதிபர் அ.சாந்தகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக காரை அபிவிருத்திச் சபை தலைவர் இ.சிவசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.யோகலிங்கம், கௌரவ விருந்தினராக காரை அபிவிருத்திச் சபை நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

(க)

# சொற்பொழிவு

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் வாராந்தம் நடைபெறும் சமய சொற்பொழிவுநிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.45 மணிக்கு முருகன் திருவருள் என்ற பொருளில் கலாநிதி தவநேசன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

(க 17)





# தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழ பிக்குகள் தீர்வு பெற்றுத் தருவர்

## இந்து–பௌத்த மாநாட்டில் சோபிததேரர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து வாழக் கூடிய ஒருதீர்வை பௌத்த துறவிகளாகிய நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பெற்றுக் கொடுப்போம் என்று எம்பிலிபிட்டிய போதிராஜ விகாரையின் விகாராதிபதி சோபிததேரர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றிலில் வைத்து ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் இந்து பௌத்த ஒற்றுமையை வலியுறுத்தி ஒரு நாள் மாநாடு நேற்று நடைபெற்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இருந்து பௌத்த துறவிகள், இந்து குருமார்கள் மேளதாள நாதஸ்வர வாத்தியங்கள் மற்றும் கண்டிய நடனத்துடன் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அழைத்து வரப்பட்டு பூசை வழிபாடுகள் நடைபெற்றன. வழிபாடுகள் நிறைவடைந்து வெளியே வந்தநிலையில், சோபிததேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண நகரில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் மாநாடு நடைபெற்றது. இதில் எம்பிலிபிட்டிய போதிராஜ விகாரை விகாராதிபதி சோபித தேரர், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், சின்மயாமிசன் ஜாக்கிரத் சைத்தன்ய சுவாமி, சுவிற்சர்லாந்து ஸ்ரீ விஷ்ணு துர்க்கை அம்மன் கோவில் குரு ஸ்ரீலஸ்ரீ சரஹணபவானந்த சுவாமிகள், யாழ்ப்பாண நாக விகாரை விகாராதிபதி ஸ்ரீ விமலதேரர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

(கு-111)

## அபிவிருத்தித் திட்டங்கள் மாணவர்களிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்ப்பாணம் சென்.ஜோசப் வித்தியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மாணவர்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

பாடசாலையில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம் மற்றும் சுகாதார வசதிகள் மேம்பாட்டின் கீழ் சீரமைக்கப்பட்ட நீர்த்தாங்கி நீர்விநியோகத் திட்டம் போன்றவை மாணவர் பயன்பாட்டுக்காக கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கிராம எழுச்சித் திட்டத்தின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கியிருந்தார் என்று முதல்வரின் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





ES Printers
மக் பிரிண்ட் (MUG) 450/=





021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பெயர் மாற்றம்**

புங்குடுதீவை சேர்ந்த **பரமேஸ்வரன் யோசியா** ஆகிய நான் இன்றிலிருந்து (31.01.2020) எனது பெயரை **பரமேஸ்வரன் யோசியன்** என்று மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பரமேஸ்வரன் யோசியன்**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை.**
**கலைப்பீடம்**
**ஊடகக் கற்கைகள் துறை**

**ஊடகக் கற்கைகள் உயர் டிப்ளோமா கற்கைநெறி (பகுதி நேரம் - இரண்டு ஆண்டுகள்) கல்வியாண்டு - 2020 / 2021**

**விண்ணப்பிக்கும் கால எல்லை நீடிப்பு**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஊடகக் கற்கைகள் துறையினால் நடத்தப்படுகின்ற **ஊடகக் கற்கைகள் உயர் டிப்ளோமா (பகுதி நேரம் - இரண்டு ஆண்டுகள்)** பயிற்சி நெறிக்கான 2020 / 2021 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

இதற்கான அனுமதிக்காகத் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ள கால எல்லை எதிர்வரும் 17.02.2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் முறை, விண்ணப்பிப்பதற்கான தகுதி போன்ற விடயங்கள் 02.01.2020 திகதிய விளம்பரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**NOTICE**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**
**WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**
**WALK – IN - INTERVIEW**

POST OF RESEARCH ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS – 02 VACANCIES

POST OF RESEARCH ASSISTANT CUM PROJECT ASSISTANT (FULL TIME) –ON CONTRACT BASIS – 02 VACANCIES

POST OF PROJECT ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS – 01 VACANCY

Walk in Interview for the above positions - On Contract Basis will be held on 07.02.2020 from 9.00 AM to 12.00 noon , at the Mini Board Room, Administration Block of the University of Jaffna.

Eligible Candidates are requested to be present for an interview with self-prepared separate application for each post in the prescribed format available in the University website along with relevant original certificates on the date and the time mentioned above.

**For further details please refer the University of Jaffna website www.jfn.ac.lk.**

**Registrar**

# தொழிலாளர் இல்லை; மூடியபடி தொழிற்சாலை!

சாவகச்சேரி, ஜன. 31

பழ வகைகளிலிருந்து பழக் கலவைகள் செய்வதற்கான இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள நிலையிலும், தகைமையுடைய பணியாளர்கள் இல்லாதமையால் மீசாலையில் உள்ள தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது என்று பழச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தென்மராட்சிப் பிரதேச பழ உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்துக்கு தென்மராட்சிப் பிரதேச செயலரின் சிபார்சுக்கமைய யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் பழங்களிலிருந்து சாறு பிழியும் இயந்திரம், அதனைச் சூடாக்கும் இயந்திரம், பொதி செய்யும் இயந்திரம் ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

மீசாலையில் உள்ள தொழிற்சாலையில் அவற்றைப் பொருத்தும் பணிகளும் நிறைவடைந்துள்ளன. ஆனால் இவற்றைச் செயற்படுத்தக் கூடிய பணியாளர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை. இந்தப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பழவகைகளைக் கொள்வனவு செய்து உற்பத்தியாளர்களையும் சங்கத்தின் மேம்பாட்டையும் நோக்காகக் கொண்டே இயந்திரங்கள் வழங்கப்பட்டன. எனினும், பணியாளர்களை நியமிக்காமல் சங்கம் காலத்தை இழுத்தடிப்பதால் அடுத்துவரும் மாதங்களில் உற்பத்தியாகும் பழவகைகளைச் சங்கத்துக்கு வழங்க முடியாமல் போகலாம் என்றும் பழச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியத்திடம் கேட்டபோது, சங்கத்துக்கு இயந்திரங்கள் மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்டு பொருத்தப்பட்டன. இயந்திரங்களைச் செயற்படுத்தக்கூடிய பணியாளர்கள் இந்தப் பகுதியில் இல்லாததால் இந்தச் சிக்கல் நீடிக்கின்றது. பணியாளர்களைத் தேடுகின்றோம். பணியாளர்களை நியமிப்பதற்குச் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அடுத்த மாதமளவில் புதிய இயந்திரங்களிலிருந்து உற்பத்திகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்தார். (த-9)

## கால்கோள் விழா



கொடிகாமம், ஜன.31

வரணி இயற்றாலை ரட்ணா முன்பள்ளியின் 2020 ஆம்ஆண்டுக்கானகால்கோள்விழாசெவ்வாய்க்கிழமை நடைபெற்றது. முகாமைத்துவக் குழுத் தலைவர் ந.புஸ்பகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், விருந்தினர்களாக வரணி நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலய அதிபர் திருமதி வளர்மதி கபிரியேற்பிள்ளை , ஆசிரியர் திருமதி சுதர்சன் நிர்மலா மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் எஸ்.மாணிக்கம், முன்பள்ளி முகாமைத்துவ குழு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாணவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (சு-159)

## விவசாயிகளின் உழைப்பை சூறையாடும் முதலாளிகள்

மன்னார், ஜன.31

மன்னாரில் இந்த வருடத்துக்காக பெரும்போக நெல் விளைச்சல் சராசரியாக 35 தொடக்கம் 40 மூடைகள் கிடைத்துள்ளன.

எனினும் அரசு நெல் கொள்வனவு செய்யாமல் இருப்பதால், தனியார்முதலாளிகள், விவசாயிகளின் உழைப்பில் பெரும் இலாபம் பெறுகின்றனர் என்று மன்னார் மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக பெரும்போக அறுவடைகள் மிகவும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

அரசின் நெல் சந்தைப்படுத்தும் சபை இன்னமும் நெல் கொள்வனவு செய்ய ஆரம்பிக்கவில்லை.

வெறுமனே விலைகள் மாத்திரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

விவசாயிகள் வங்கிகளிலும், தனியாரிடமும் வட்டிக்கு கடன் பெற்று விவசாயம் செய்துள்ளனர். அதனால் அறுவடை செய்துள்ள நெல்லை உடனடியாக விற்பனை செய்ய வேண்டிய தேவை விவசாயிகளுக்கு உள்ளது.

இதனைப் பயன்படுத்தி தனியார் நெல் கொள்வனவாளர்கள் அறாவிலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்கின்றனர்.

விவசாயிகளுக்கு அவசரமாகப் பணம் தேவைப்படுவதாலும், அறுவடைகள் செய்யப்படும் நெல்லைக் காய வைத்துப் பராமரிப்பதற்கு உரிய உலர் தளங்களோ களஞ்சிய சாலைகளோ இல்லாத காரணத்தாலும்தனியார்முதலாளிகளிடம்நெல்லைவிற்கின்றனர்.

அரசு இந்த வாரத்துக்குள் நெல்கொள்வனவு செய்ய ஆரம்பித்தால் பல விவசாயிகள் பாதிக்கப்படாமல் காப்பாற்றப்படுவர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை முல்லைத்தீவு , மன்னார் மாவட்டங்களில் நெல் சந்தைப்படுத்தல் சபையால் நேற்றுமுன்தினம் முதல் நெல் கொள்வனவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. (சு-213)

## செயற்பட்டு மகிழ்வோம்

தென்மராட்சி, ஜன.31

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். அதிபர் பொ.ந டேசலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி மேற்கு சங்கானை பிரதேச செயலர் திருமதி பிரேமினி பொன்னம்பலம், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக்கல்லூரியின்பிரான்ஸ் கிளை பழைய மாணவர் த.பரமா னந்தம், பாதுகாப்புச் சேவை நிறுவன முகாமையாளர் வி.சுகுமாரன், தென்மராட்சி அபிவிருத்தி கழக ஐக்கிய ராச்சிய விளையாட்டுத் துறை இணைப்பாளர் ம.சிறிதாசன் ஆகியோர் கலந்து கொள்வர். (சு-159)

## சிறுதானியச் செய்கைகளுக்கு குடாநாட்டு விவசாயிகள் தயார்

யாழ்ப்பாணம் ,ஜன.31

பெரும்போக நெற்செய்கையை அடுத்து, யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகள் சிறுதானிய செய்கைக்குத் தயாராகி வருகின்றனர். நிலங்களைப் பண்படுத்தி, சிறுதானியச் செய்கைக்கு அவர்கள் தயாராகியுள்ளனர்.

பெரும்போக நெற்செய்கைக்கான அறுவடைப் பணிகள் தற்போது சூடுபிடித்துள்ளன. அநேகமான இடங்களில் பரவலாக அறுவடைப் பணிகளில் விவ சாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

நெல் அறுவடை மேற்கொண்ட விவசாயிகள் தமது வயல் நிலங்களை உழுது பசளை போட்டு சீர் செய்தும் வருகின்றனர். சிறுதானியப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் நடவடிக்கையாக செய்கையாளர்கள் இவற்றில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர் என்று விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

வலிகாமம் மேற்கு, தென்மராட்சி போன்ற வயல்களில் அநேகமான செய்கையாளர்கள் இந்தப் போகத்திலும் சிறுதானியச் செய்கையில் ஈடுபடவுள்ளனர். குரக்கன், நிலக்கடலை, கௌப்பி,பயறு போன்ற சிறுதானியங்களைச் செய்கையாளர்கள் தமது வயல்களில் விதைத்து செய்கையில் ஈடுபடவுள்ளனர். வயல்களில் கிணறு வசதிகளை உடைய செய்கையாளர்கள் இந்தச் செய்கைக்கு அதிக ஆர்வம் காட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## வலைகளை வெட்டிய விஷமிகள்

வலி.தென்மேற்கு, ஜன. 31

இறால் பிடிப்பதற்காகக் கடலில் போடப்பட்டிருந்த 2 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இரவோடிரவாக விஷமிகளால் வெட்டிச் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் ஆறு மீனவர்கள் தொழில் செய்யமுடியாமல் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சம்பவம் யாழ்ப்பாணம் சாவல்கட்டு, காக்கைதீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

வலைகளைக் கடலிலிருந்து மீட்டுத் துப்பரவு செய்வதற்காக மீனவர்கள் நேற்றுமுன்தினம் காலை கடலுக்குச் சென்றபோது ஆறு மீனவர்களின் வலைகள் வெட்டிச் சேதப்படுத்தப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

மீனவர்கள் இது பற்றி மாவட்ட கடற்றொழில் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளனர். (த-115)





யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி(பேய்ச்சி) அம்பாள் ஆலய பஞ்சதள இராஜகோபுர மஹாகும்பாபிஷேக பெருவிழா நேற்று வியாழக்கிழமை காலை வெகுவிமரிசையாக நடைபெற்றது. படங்கள்: ஐ.சிவசாந்தன் (சு)

# கிழங்குச் செய்கையையும் அழிக்கும் படைப்புழுக்கள்

## அச்சுவேலியில் இனங்காணப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 31
**யாழ்ப்பாண மாவட்டத்தில் சோளப் பயிர்களைத் தொடர்ந்து தற்போது உருளைக் கிழங்குப் பயிர்ச்செய்கையையும் படைப்புழுக்கள் தாக்கத் தொடங்கியுள்ளன என்று விவசாயப் போதனாசிரியர்கள் தெரிவித்தனர்.**



அச்சுவேலி செல்வநாயகபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் படைப்புழுக்களின் தாக்கம் இனங்காணப்பட்டுள்ளது.

இவற்றைக் கட்டுப்படுத்த யாழ்ப்பாண மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலக விவசாய போதனாசிரியர்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று ஆய்வுகளில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்பொழுது 127 ஹெக்ரேயர் அளவில் உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கை இடம்பெறுகின்றது.

படைப் புழுத் தாக்கம் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் விவசாயிகள் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

இவற்றைக் கட்டுப்படுத்த விவசா யிகள் காலை, மாலை எனக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும்.

பயிர்கள் வாடிக் காணப்பட்டால் மண்ணைக் கிளறிப் பார்ப்பதனூடாக படைப் புழுத் தாக்கத்தை அறிந்துகொள்ள முடியும் என்று விவசாயத் திணைக்கள அலுவலர்கள் தெரிவித்தனர். இவற்றைக் கட்டுப்படுத்துவதற்குப் பாவிக்க வேண்டிய மருந்து முறைகள் மற்றும் ஆலோசனைகளையும் அவர்கள் வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-111)

## வீரசிங்கம் வித்தியின் செயற்பட்டு மகிழ்வோம்





கொடிகாமம்.ஜன.31
மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த புதன்கிழமை பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

அதிபர் கா.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய கலாநிதி மருத்துவர் தி.குமணன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், கௌரவ விருந்தினராக க.குருபரன், தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும், வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன "சகல தரப்பினரையும் நாம் இணைத்து செயற்பட வேண்டும். அப்போது தான் எமது பிரதேசமும், பாடசாலையும் நல்ல முன்னேற்றம் அடையும். பெற்றோர்கள் மாணவர்களின் கல்வியை மட்டும் யோசிக்காது நேரம் இருக்கும் போது அவர்களை உடற்பயிற்சிக்குக் கட்டாயம் விட வேண்டும்" என்று பிரதம விருந்தினர் தனது உரையில் தெரிவித்தார். (க-159)

## மாணவிகள் துஷ்பிரயோகம் பிரதி அதிபர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன.31
பாடசாலை மாணவிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் பிரதி அதிபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். வண்டுரம்ப என்ற இடத்தில் வைத்து இந்த பிரதி அதிபர் நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். தரம் 7 இல் கல்வி கற்கும் 11 மாணவிகளை இவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் பாடசாலைக்குச் சென்ற பொலிஸார் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் அறிக்கைகளைப் பெற்ற பின்னர் பிரதி அதிபரைக் கைது செய்தனர். கைதுசெய்யப்பட்டவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-22)

## உணவுப் பொதிகள் கையளிப்பு



வவுனியா.ஜன.31
வவுனியா மார்பகச் சிகிச்சைப் பிரிவில் சுவாசம், காசம் சம்பந்தமாக சிகிச்சை பெற்றுவரும் நோயாளரின் குடும்பங்களுக்கு உலர்உணவுகள் வழங்கப்பட்டன.

வீ 3 பவுண்டேசன் நிறுவனம் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்துடன் இணைந்து மாதாந்தம் உலர் உணவுகளை வழங்கி வருகிறது. அந்த வகையில் இம் மாதத்துக்கான உணவுப் பொதிகளை காச நோய் சிகிச்சைப்பிரிவு மருத்துவர் ஹரிஹரனிடம் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் நேற்றுக் கையளித்தார். (ஐ-222)

## மெய்வன்மைப் போட்டி

நவாலி,ஜன.31
நவாலி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

பாடசாலை அதிபர் கி.கிருஷ்ணா ணந்தா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.காண்டீபன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய தொழில் நுட்ப வழிகாட்டல் அலுவலர் கோ.குலபாலசிங்கம், கௌரவ விருந்தினராக ச.சுதாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-50)







யாழ்ப்பாணம் வண்வடகிழக்கு கொண்டலடி விநாயகர் (இறைமூத்த நைனார்) ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ஜ)

திருக்கணிதப் பஞ்சாங்கப்படி சனி பகவான் ஜனவரி மாதம் 24ஆம் திகதி தமிழுக்குத் தை மாதம் 10ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை சுமார் 10.03 மணிக்கு, தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்குப் பிரவேசம் செய்துள்ளார்.



# சனிப்பெயர்ச்சி பலன்கள்

## ரிஷபம்



அதிக பணவரவால் திக்குமுக்காடப்போகும் ரிஷப ராசிக்காரர்களே....

ரிஷப ராசிக்காரர்களுக்குப் பெரும் நிம்மதி தரக்கூடிய ஒரு சனிப்பெயர்ச்சியாக இந்த சனிப்பெயர்ச்சி இருக்கும். உங்களின் ராசிக்கு சனிபகவான் கடந்த மூன்று ஆண்டுகளாக அஷ்டம சனியாக இருந்து உங்களை வழி நடத்தியதால் பல துன்பங்களையும் தொல்லைகளையும் அனுபவித்து வந்தீர்கள்.

ரிஷப ராசிக்காரர்களுக்கும் மனதளவில் ஓர் ஆதங்கம் இருந்து வந்துள்ளது. 'என்னுடைய முயற்சிகள் பெரிய அளவில் வெற்றி பெறவில்லையே, சமூகத்திலும் பணியிடத்திலும் ஓர் அங்கீகாரம் ஏன் கிடைக்கவில்லை, என்ற ஆதங்கம் நீண்ட நாள்களாகவே இருந்து வந்தது.

வயது, கல்வித் தகுதி, கடின உழைப்பு ஆகியவற்றுக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கவில்லை எனும் கவலை உங்களின் மனத்தை வாட்டி வந்தது. வாழ்க்கையின் முன்னேற்றப்பாதையும் தடைப்பட்டுக்கொண்டே வந்தது. இந்த சனிப்பெயர்ச்சி அந்தத் தடைகளையெல்லாம் உடைத்தெறியும்.

அஷ்டம சனியில் முயல்கின்ற எந்தக் காரியமும் பெரிதாக வெற்றி பெறாது என்பது ஜோதிட விதி. அந்த நிலையெல்லாம் மாறி, சனி பகவான் 9 ஆம் இடத்துக்கு வருவதால், உங்களின் மனதிலிருந்த பிடித்த துறையைத் தேர்வு செய்து அதில் நீங்கள் சென்றால், வெற்றி பெறுவீர்கள்.

'கண் விழித்துப் படித்தும் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் கிடைக்கவில்லையே' என்கிற மனக் குறை இத்தனை நாள்களாக ரிஷப ராசி மாணவர்களுக்கு இருந்து வந்தது. அந்த நிலை இனி மாறும்.

ரிஷப ராசிக்காரர்களுக்கு கடந்த மூன்று ஆண்டுகளாகவே பண வரவு அத்தனை சரியாக இல்லை. கடன் பெறவேண்டிய சூழல் கூட ஏற்பட்டது. ஆனால், அந்த நிலையெல்லாம் இப்போது மாறிப்போகும். பணவரவு அபரிமிதமாக இருக்கும். பழைய கடன்களையெல்லாம் இப்போது கொடுத்து முடிப்பீர்கள்.

பொதுவாக, அஷ்டம சனி விலகினாலே ஜாதகருக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்பட்டு, அவர் சிறப்புடன் இருக்கப் போகிறார் என்பது அர்த்தம். இதுவரை இருந்த மனக் குறைகள் யாவும் நீங்கி, ரிஷப ராசிக்காரர்கள் மன மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் பயணிக்கப் போகிறீர்கள்.

குறிப்பாக, கன்னிப் பெண்களுக்கு இருந்து வந்த திருமணத் தடைகள் நீங்கி, இப்போது திருமணம் கைகூடிவரும். அஷ்டம சனி பெரும்பாலும் திருமணத் தடையை ஏற்படுத்தும். அப்படியே அதையும் மீறி திருமணம் நடந்திருந்தாலும் அவர்கள் பிரிவதற்கான சில சம்பவங்களும் விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும் நடந்திருக்கும்.

ரிஷப ராசிக்காரர்களுக்கு மாதாமாதம் நிரந்தரமான ஒரு வருமானம் வரக்கூடிய சூழ்நிலை இப்போது உருவாகும். இதுநாள் வரை இருந்து வந்த பணத் தட்டுப்பாடு, பணப்பற்றாக்குறைகளெல்லாம் உங்

# வாக்கியம், திருக்கணிதம்

## சனிப்பெயர்ச்சி குறித்து சோதிடர்கள் சொல்வது என்ன?

திருக்கணிதப்படி கடந்த 24.1.2020 சனிப்பெயர்ச்சி நடந்துள்ளது. வாக்கியப் பஞ்சாங்கப்படி 26 டிசெம்பர் 2020 அன்று சனிப்பெயர்ச்சி நடைபெற உள்ளது. எதனால் இவ்வளவு கால வித்தியாசம் ஏற்படுகிறது, என்பதை அறிந்துகொள்ள பஞ்சாங்கங்கள் குறித்து அறிந்துகொள்ள வேண்டும்.

வாக்கியப் பஞ்சாங்கத்தைப் போன்றே முக்கியத்துவம் வாய்ந்த பஞ்சாங்கங்களாகக் கருதப்படுவது திருக்கணிதப் பஞ்சாங்கம். சந்திரனின் அயனாம்சத்தின் அடிப்படையில் கணிக்கப்படும் இந்தத் திருக்கணித முறையும் பழங்காலத்திலிருந்தே உருவானது என்றும் வாக்கியப் பஞ்சாங்கத்தில் காணப்படும் குறைகள் நீக்கப்பட்டு 15ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. திருக்கணிதத்திலும் பல்வேறு பஞ்சாங்கங்கள் காணப்படுகின்றன. வாக்கியத்துக்கும் திருக்கணிதத்துக்கும் ஒருநாளில் அதிகபட்சமாக 17 நாழிகை வரை வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. அதாவது 6 மணி 48 நிமிஷம் வரை இந்த வேறுபாடு ஏற்படும். திருக்கணிதமே திருத்தப்பட்ட துல்லியமான பஞ்சாங்கம் என்று சொல்கிறார்கள் இதைப் பின்பற்றுபவர்கள்.

அத்தகைய திருக்கணித முறைப்படி 24ஆம் திகதி சனிப்பெயர்ச்சி நடைபெற்றுள்ளது. இரு பஞ்சாங்கங்களின் அடிப்படையில் சாதாரணமாக ஓரிரு மாத இடைவெளிகளில் நிகழும் சனிப்பெயர்ச்சி ஏன் இந்த முறை ஏறக்குறைய ஓராண்டுக்கால இடைவெளியைக் காட்டுகின்றன.

"பொதுவாக வாக்கியப் பஞ்சாங்கத்துக்கும் திருக்கணிதத்துக்கும் இடையிலான சனிப்பெயர்ச்சி குறித்த இடைவெளி பொதுவாக ஒருசில மாதங்கள் மட்டுமே இருக்கும். இந்த ஆண்டு பன்னிரண்டு மாத இடைவெளிக்குக் காரணம் 2017ஆம் ஆண்டு நிகழ்ந்த சனிப்பெயர்ச்சி. பொதுவாக, ஒரு ராசியிலிருந்து சனிபகவான் முதல் முறை எப்போது பெயர்ச்சியாகிறாரோ அதுவே பெயர்ச்சிக் கணக்கு. எனவே, 2017 ஜனவரியிலேயே சனிப்பெயர்ச்சி நிகழ்ந்துவிட்டது. ஆனால், இந்தமுறை மகர ராசிக்குள் பிரவேசிக்கும் சனிபகவான் வக்கிரமாகி தனுசுக்கு வராமல் மகரத்திலேயே தங்கிவிடுகிறார். அதனாலேயே இந்தப் பன்னிரண்டு மாத வேறுபாடு எமக்குத் தெரிகிறது. ரிஷிகளின் வாக்கு என்பதால்தான் இன்றளவும் கோயில்களில் வாக்கியப் பஞ்சாங்கமே பின்பற்றப்படுகிறது. தனிப்பட்ட முறையில் எந்தப் பஞ்சாங்கத்தைப் பின்பற்றுவது என்பது அவரவர் விருப்பம். பஞ்சாங்கங்கள் பலவாயினும் பரம்பொருள் ஒருவரே. அவரை வழிபட்டு நல்லருளைப் பெறுவோம்.

தினம் ஒரு சிந்தனை

## உன்மேல் நம்பிக்கை வை!

**உன்மேல் உனக்கு நம்பிக்கை இருந்தால் கடவுளே தேவையில்லை - பெரியார்.**

**உன்மேல் உனக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் கடவுளே வந்தாலும் உன்னை காப்பாற்ற முடியாது - விவேகானந்தர்.**

உன்னை பிறரோடு ஒப்பிட்டுக் கொள்ளும் போதெல்லாம் உன் சக்தி விரயமாகிறது. உன்னை உன்னோடு ஒப்பிட்டுக் கொள்ளும் போதெல்லாம் உன் வளர்ச்சி நிகழ்கிறது.

நமது அன்றாட வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் பல திறமைசாலிகளைப் பார்த்து ஆச்சரியப்படுவோம். 'இவர்கள் பிற்காலத்தில் மிகப் பெரிய வெற்றி பெற்று பிரபலமாவார்கள்' என்று கணித்திருப்போம்.

ஆனால் நாளடைவில் அவர்களில் மிகச் சிலரே வெற்றியடைகிறார்கள். பெரும்பாலானவர்கள் நாம் எதிர்பார்த்த அளவு சாதனைகள் புரிவதில்லை என்பதைவிட இருந்த சுவடே தெரியாதபடி காணாமல் போய்விடுவதுண்டு.

வெற்றியடைந்தவர்களைக் கண்டு ஆச்சர்யவப்படுவதைவிட அதிகத் திறமை கொண்டவர்களாக நாம் கணித்தவர்கள் சாதிக்காமல் போனது ஏன்? என்ற ஒரு மிகப்பெரிய கேள்வி நம்முன் எழுவதுண்டு. பள்ளியில் கால்பந்து விளையாட்டில் சூரப்புலியாக இருந்த நீங்கள், தற்போது சம்பந்தமே இல்லாமல் கணக்கு எழுதிக் கொண்டிருக்கிறீர்களே? என்று கேட்டால், பெரும்பாலானவர்கள் சொல்லும் பதில் என்னவாக இருக்கும் தெரியுமா?

'விதி'

"விதி' என்ற ஒற்றைச் சொல்லில் அவர்களது தோல்விகளை மறைத்துக் கொள்வார்கள். விதி என்பது தங்களுக்குத் தாங்களே எழுதிக் கொள்ளும் முடிவுரை என்ற உண்மை அவர்களுக்குப் புரிவதில்லை.

ஆம், விதி என்பது எழுதப்படுவது அல்ல, ஏற்படுத்திக் கொள்வது என்பதே நிதர்சன உண்மை. தோல்வியடைந்த மனிதர்களை ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் அவர்களிடம் மூன்று குணாதிசயங்கள் இருப்பதைக் கண்டிப்பாக காண முடியும். சாதனை புரிந்தே தீர வேண்டும் என்ற அக்னி, அதாவது வெறி இருப்பதில்லை. இந்த வெறி இல்லாதவர்களிடம் எத்தனை திறமை இருந்தாலும் அவர்கள் பிரகாசிப்பதில்லை. தற்காலிக தடங்கல்களும், நிராகரிப்புகளும், தோல்விகளும் முயற்சிகளைக் கைவிட அவர்களுக்கு போதுமானவையாக இருக்கும். வெற்றிப் பயணத்தின்போது தடங்கல்கள், தோல்விகள் சகஜம் என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு தொடர்ந்து பயணப்படுங்கள். நீங்களாக ஏற்றுக்கொள்ளாத வரை தோல்வி நிச்சயமானதல்ல. அது வெற்றிக்கு முந்தைய இடைநிலையே. பொய்யான விதியை ஏற்றுக் கொண்டு முயற்சியைக் கைவிடாதீர்கள்.

விதியின் நாயகனான இறைவன், திறமையை மனிதர்களுக்குத் தந்திருப்பது வெற்றி பெறுவதற்காகவே என்பதை மறந்துவிடாதீர்கள். முதலில் நாம் மனித நேயத்துடன் நமது பெற்றோர்களுக்கு நல்ல பிள்ளைகளாக நடப்போம்...!!

## நாளை 01.02.2020

சனிக்கிழமை

**விகாரி - தை 18**

திதி: ஸப்தமி பி.ப. 04.01 வரை
நட்சத்திரம்– அச்சுவினி மு.இ.06.58வரை

**ராகுகாலம்- 09.36- 11.06 வரை**
**சுப நேரம்- 3.36- 5.06 வரை**
**எமகண்டம்- 6.36-08.06 வரை**

# 175 மாணவர்களுக்கு வைரஸ் காய்ச்சல்!

கொழும்பு, ஜன. 31

பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் பயிலும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் திடீரென வைரஸ் தொற்றுக்கு இலக்காகி நோய்வாய்ப்பட்டுள்ளனர். இதன் காரணமாக எதிர்வரும் 3ஆம் திகதிவரை கல்வியல் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் சுமார் 100 பேரும், நேற்றையதினம் சுமார் 75 பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், இவர்களுக்கு கொட்டகலை, டிக்கோயா கிளங்கள் ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது என்றும் மருத்துவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களுள் சிலருக்கு நிமோனியா காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், மேற்படி மாணவர்கள் எவ்வகையான வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்பதை கண்டறிவதற்காக இரத்த, சிறுநீர் மாதிரிகள் பேராதனை, கண்டி வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம)

## சிங்களத்தில்...

வில் தேசியகீதம் இரு மொழிகளிலும் இசைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மஹிந்த சமரசிங்க, சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்படும் என்று அறிவித்தார்.

அத்துடன், நபரொருவர் தனக்குத் தெரிந்த மொழியில் தேசிய கீதம் பாடமுடியும் என்பதால் சிலவேளை வடக்கில் நடைபெறும் சுதந்திர நாள் நிகழ்வில் தமிழ் மொழியில் தேசியகீதம் இசைக்கப் படலாம் எனவும் அமைச்சர் கூறினார். பிரதான சுதந்திர தின நிகழ்வில் சிங்கள மொழியில் மட்டுமே தேசியகீதம் பாடப்படும் என்பதை அமைச்சர் திட்டவட்டமாக இடித்துரைத்தார்.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர், அதே ஆண்டு இடம்பெற்ற சுதந்திர நாளில், நிகழ்வின் இறுதியில் தமிழ் மொழியில் தேசியகீதம் இசைக்கப்பட்டது. அதன்பின்னர் வருடாந்தம் அந்த நடைமுறை பின்பற்றப்பட்டுவந்தது.

2019ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் கோத்தாபய வெற்றிபெற்ற பின்னர், அவர் தலைமையில் புதிய அரசு பதவியேற்றது.

இந்த நிலையில் இம்முறை தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டுமே இசைக்கப்பட வேண்டும் என்ற யோசனை பொது நிர்வாக அமைச்சர் ஜயக்க பண்டார தென்னகோனால் முன்வைக்கப்பட்டது. இதற்குப் பல தரப்பினரும் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். சர்வதேச ரீதியில்கூட எதிர்ப்புகள் வலுத்தன. ஆனால், இது தொடர்பில் அரசு இறுதியான முடிவை எடுக்கவில்லை என்றும், தமிழிலும் தேசியகீதம் பாடலாம் எனவும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் அறிவித்து வந்தனர். தேசிய கீதத்தை இசைப்பதற்கு தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் உள்வாங்கப்பட்டிருந்தாலும் கூட கடற்படையின் இசைநெறிப்படுத்தலுடன் இவர்களும் சிங்கள மொழியிலேயே இசைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5,44)

## ஒருங்கிணைப்பு...

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கான அழைப்பு யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதில்லை என்று தீர்மானித்துள்ளது. ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நியமனங்கள், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் வடக்கில் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக கூட்டத்தை கூட்டமைப்பு புறக்கணிக்க முடிவு எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

ஆனாலும், கூட்டமைப்பு வசமுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் நிர்வாக நடைமுறைக்கு அமைவாக இன்றைய கூட்டத்தில் பங்கேற்பார்கள்.

இதேவேளை, கடந்த அரசின் காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுக்கு இன்னமும் நிதி விடுவிக்கப்படவில்லை. சுமார் 3 ஆயிரம் மில்லியன் ரூபா வரையில் விடுவிக்கப்பட வேண்டும். அந்த நிதியை விடுவிக்கக் கோரும் தீர்மானத்தை இன்றைய கூட்டத்தில் நிறைவேற்றுமாறு கோரி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

மேலும், யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்படாத இடங்களை விடுவிக்கவும் கோரும் தீர்மானத்தையும் நிறைவேற்றுமாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (ஒ.5,105)

## சங்கரி...

யுள்ளார்.

தமிழர் ஐக்கிய முன்னணி என்ற பெயரை தமிழிலும் சிங்களத்திலும் உச்சரிக்கும் போது எந்த மாறுபாடும் காணப்படாத போதிலும் ஆங்கிலத்தில் அதைக் குறுக்கி உச்சரிக்கும்போது TUF என்றே உச்சரிக்கும் நிலை ஏற்படும். இந்த TUF என்ற உச்சரிப்பானது தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்பகாலப் பெயரின் உச்சரிப்பாகக் காணப்படுவதனால் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எழுத்தில் கடிதம் அனுப்பப்பட்டு ஏதும் ஆட்சேபனை இருந்தால் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் தெரியப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. (ம-105)

## ஆளும்...

இந்த நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காலத்தில் கிராம சக்தி செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. கிராம சக்தி திட்டம் முன்னெடுக்கப்படும்போது அதற்கு உள்வாங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை, அப்போதைய ஜனாதிபதியின் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய மாவட்ட அரசியல்வாதிகளே தெரிவு செய்து பரிந்துரைத்திருந்தனர். இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆட்சி மாற்றத்தின் பின்னர் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்குள் மாற்றப்பட்டனர்.

அவர்கள் இப்போது ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலகங்களுக்கு மாவட் டச் செயலகங்களால் வரும் சுற்றறிக் கைகள், பயனாளிகள் தெரிவு என்று சகல விடயங்களிலும் இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூக்கை நுழைப்பதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. பிரதேச செயலக அதிகாரிகளால் சுயமாகப் பயனாளிகள் பட்டியல் தெரிவு செய்யப்படாமல், தாம் வழங்கும் பட்டியலையே பரிந்துரைத்து அனுப்புமாறு அவர்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

மறுபுறம், ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சரின் தொகுதி அமைப்பாளர்கள் தாம் பரிந்துரைக்கும் பயனாளிகளின் பட்டியலை மாவட்டச் செயலகத்துக்கு பரிந்துரைக்குமாறு அழுத்தம் கொடுக்கின்றனர்.

இரு தரப்பு அழுத்தங்களுக்குள்ளும் அதிகாரிகள் சிக்கித் திணறுகின்றனர். சுயமாக நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ஒ.5)

# இந்தியா செல்கிறார் மகிந்த

கொழும்பு, ஜன. 31

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அரசு முறைப்பயணமாக அடுத்த வாரம் இந்தியா செல்லவுள்ளார். எதிர்வரும் 7ஆம் திகதி இந்தியா செல்லும் அவர் எதிர்வரும் 8ஆம் திகதி தலைநகர் டெல்லியில் பிரதமர் மோடியை சந்தித்துப் பேசுகிறார். 11ஆம் திகதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யும் இலங்கை பிரதமர் ராஜபக்சே, பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

இந்த சுற்றுப்பயணத்தின் போது வாரணாசி, சர்னத், புத்த கயா, மற்றும் திருப்பதி ஆகிய இடங்களுக்கும் ராஜபக்ஷ செல்லவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பெரு...

இந்த வீதிகளின் மறுசீரமைப்புப் பணிக்கான ஒப்பந்தம் சீன நிறுவனத் துக்கு வழங்கப்பட்ட பின்னர் இந்திய அரசு கரிசனை செலுத்தியது. அதன் பின்னர் இந்திய நிறுவனத்துக்கு இவற்றை வழங்க ரணில் அரசின் அமைச்சரவை தீர்மானித்திருந்தது. இந்தியா அதனைப் பொறுப்பெடுத்த பின்னர் மறுசீரமைப்புப் பணிகள் அப்படியே கைவிடப்பட்டுள்ளன. அடுத்த கட்ட நகர்வுகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மானிப்பாய் காரைநகர், வழுக்கையாறு புங்குடுதீவு, குறிகாட்டுவான், யாழ்ப்பாணம் பொன்னாலை பருத்தித்துறை வீதிகளின் மறுசீரமைப்புத் தொடர்பில் கடந்த 4 ஆண்டுகளாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற பல்வேறு அபிவிருத்திக் கூட்டங்களிலும் ஆராயப்பட்டன.

இந்த வீதிகளை மறுசீரமைப்பதற்கான கேள்வி கோரல்கள் மேற்கொள்ளப்பட்டன. சீன நிறுவனம் குறைந்த தொகைக்கு பணிகளை முன்னெடுக்க முடியும் என்று கூறியது. சீன நிறுவனத்துக்கு வீதி மறுசீரமைப்புப் பணிக்கான ஒப்பந்தத்தை வழங்க அமைச்சரவை தீர்மானித்தது.

இதன் பின்னர் இந்தியா இதில் தலையீடு செய்தது. இந்தியாவின் கரிசனையையடுத்து சீனாவிடமிருந்து மீளப் பெறப்பட்டு இந்தியாவுக்கு அவற்றை ஒப்படைக்க அரசு தீர்மானித் தது. அதற்கான அமைச்சரவைப் பத்திரமும் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அனுமதியும் பெறப்பட்டிருந்தது.

இந்தியா இதனைப் பொறுப்பேற்ற பின்னர் சில நகர்வுகள் இடம்பெற்றன. ஆயினும் ஆட்சி மாற்றத்துடன் இந்தப் பணிகள் அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளன. (ஒ.5)


## பிரிகிறது...

பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருப்பதால் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருக்கும் வேறு நாடுகளின் மக்களால் பிரிட்டிஷார்களின் தொழில்வாய்ப்பு, கல்வி என்பன சுரண்டப்படுகின்றது என்று பொதுவான குற்றச்சாட்டு இருந்தது. இதனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் தொடர்வதா அல்லது விலகுவதா என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பெரும்பான்மையான மக்கள் விலகுவது என்று வாக்களித்தனர். இதையடுத்து முன்னாள் பிரதமர்கள் டேவிட் கமரூன், திரேசா மே ஆகியோர் பிரிந்து செல்வதற்குரிய நகர்வுகளை எடுத்த போதிலும் எதுவும் பயனளிக்கவில்லை. இதனால் அவர்கள் பதவி விலகினர். பல மாதங்களாக இந்தப் பிரிவு சாத்தியப்படாமல் தள்ளிப்போய்க்கொண்டே இருந்தது. இதையடுத்து தற்போதைய பிரதமர் போரிஸ் ஜோன்சன் எடுத்த முயற்சிகள் மற்றும் ஒப்பந்தங்களின் விளைவாக பிரிட்டன் பிரிந்து செல்வதற்கு ஏதுநிலை உருவானது. இதையடுத்து இன்று நள்ளிரவுடன் பிரிட்டன் பிரிந்து செல்லலாம் என்று அனுமதிக்கப்பட்டுள்ளது. (ம)









## இன்றைய நாள்

**மேடம்:** நல்லவரையும் தவறாக கருதும் எண்ணம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். பணவரவு குறைந்த அளவில் இருக்கும். நேரத்திற்கு உணவு உண்பதால் உடல்நலம் சீராகும்.

**இடபம்:** தனித்திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். சமூகத்தில் கூடுதல் அந்தஸ்து உருவாகும். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூல காரணி பலம் பெறும்.

**மிதுனம்:** மனதில் புத்துணர்வுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபார கூடுதல் வளர்ச்சி பெறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள் .

**கடகம்:** அனுபவசாலியின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் அனுகூலத்தை காப்பது நல்லது. அளவான பணவரவு இருக்கும். உறவினர்களிடம் கருத்து வேறுபாடு வராதபடி பேசுவது நல்லது..

**சிம்மம்:** செயல்களில் முன்யோசனையுடன் ஈடுபடுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க அதிக உழைப்பு தேவைப்படும். உறவினர் வகையில் கூடுதல் செலவு ஏற்படலாம்.

**கன்னி:** அணுகுமுறையின் மாற்றம் நற்பலன் தரும். விலகிச் சென்ற உறவினர், விரும்பி சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழித்து புதிய நிலை எட்டும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**துலாம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். கருணைமனதுடன் நண்பருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** தேவையற்ற சிந்தனை உருவாகலாம். சுற்றுப்புற சூழ்நிலை உணர்ந்து செயல்படவும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.

**தனுசு:** எதிர்வரும் பணிகளுக்கு, முன்னேற்பாடு அவசியமாகும். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை தொந்தரவு தரலாம். அளவான பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** மனதில் புத்துணர்வு ஏற்படும். குடும்ப உறுப்பினர் ஆதரவாக நடந்து கொள்வர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வெகுநாள் காணாமல் தேடிய பொருள் கிடைக்கும்.


**கும்பம்:** நிகழ்வுகளால் மனதில் அதிருப்தி கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான பணிபுரிவீர்கள். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** திட்டம் செயல் வடிவம் பெறும். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த மாட்டீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். தாராள பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள்.

# போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்திய நீண்ட சுரங்கம்

**கலிபோர்னியா, ஜன.31**

**கலிபோர்னியாவில் சான் டியாகோ நகரில் மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல் சுரங்கப் பாதையொன்றை பிடரல் முகவர் நிலைய அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மிக நீண்ட சுரங்கப் பாதையாக இது அமைந்துள்ளது.**



4 ஆயிரத்து 309 அடி நீளம் கொண்ட இந்த சுரங்கப் பாதையானது, மெக்ஸிக்கோவின் டிஜுயனா எல்லையிலிருந்து 250 அடி தூர தெற்கே ஆரம்பமாகி கலிபோர்னியாவின் சான்டியாகோவரை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுரங்கப் பாதையானது காற்றோட்டம், மின்சாரம் என்பவற்றை கொண்டமைந்துள்ளதுடன், போதைப்பொருள் பரிமாற்ற நடவடிக்கைகளுக்காக ரயில் வகையை ஒத்த வண்டியொன்றும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அமெரிக்க சுங்க மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க சுங்க மற்றும் எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அவர்களுடைய பங்காளர்களின் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்ட இந்த சுரங்கப் பதையானது தரையிலிருந்து 70 அடி ஆழத்தில் அமைந்துள்ளது.

சுமார் 5 அடி, 5 அங்குல உயரமும், இரண்டு அடி அகலமும் கொண்ட இந்தச் சுரங்கப் பாதை கண்டுபிடிப் பின்போது எந்தவொரு கைது நடவடிக்கைகளும் இடம்பெறாத நிலையில் அதிகாரிகள் இது தொடர்பில் விரிவான விசாரணையொன்றை ஆரம்பித்துள்ளனர். அதற்கு முன்னர் சான் டியாகோவில் 2014 ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 259 அடி நீளம் கொண்ட சுரங்கப் பாதையொன்று கண்டுபிடிக்கப்பட்டி ருந்தது. (எ)

# இஸ்ரேலியப் பெண்ணுக்கு மன்னிப்பு வழங்கிய புடின்

கொழும்பு, ஜன. 31

போதைப்பொருள் கடத்தல் தொடர்பான குற்றச்சாட்டுக்காக ஏழரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இஸ்ரேலிய நாட்டைச் சேர்ந்த நாமா இசச்சர் என்ற பெண்ணை விடுதலை செய்யுமாறு புடின் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் இரட்டை குடியுரிமையை பெற்ற இசச்சார், 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மொஸ்கோவில் சட்டத்தரணியாக கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் இந்தியாவிலிருந்து இஸ்ரேலுக்கு பயணித்தபோது போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டார்.

அவரது பைகளிலிருந்து 9.5 கிராம் கஞ்சாவை பொலிஸார் கண்டு பிடித்தனர். இதன் பின்னர் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் இசச்சார் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு ஏழரை ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அவருக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு பல முறை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ரஷ்ய நாட்டு ஜனாதிபதி புடினிடம் கோரியிருந்தார். தற்போது புடின் அவரை மன்னித்து விடுதலை செய்துள்ளார். புடினின் இந்த நடவடிக்கைக்காக இஸ்ரேல் பிரதமர் நன்றிகளையும் தெரிவித்துள்ளார். (எ)





# கொரோனா பரவல் எச்சரிக்கை தேவை

*உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு*


நியூயோர்க், ஜன. 31

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் முழு உலகமும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்தியுள்ளது.

சவால் பெரியதாக இருந்தாலும் அதற்கான பதில் நடவடிக்கை அதைக்காட்டிலும் ஆக்கபூர்வமாக உள்ளதென உலக சுகாதார ஸ்தாபனத்தின் அவசர சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் டாக்டர் மைக் ரியன் சீனாவின் நடவடிக்கைகள் குறித்துப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.,

கொரோனா வைரஸ் உலக சுகாதார அவசரகால நிலைக்கு வழிவகுக்குமா என்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக உலக சுகாதார ஸ்தாபனம் நேற்று (30) கூடியது. கொரோனா வைரஸ் தொற்றினால் சீனாவில் 130 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தமையுடன் கிட்டத்தட்ட 6,000 பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவின் வுஹான் நகரில் உருவாகிய கொரோனா வைரஸ் தற்போது தாய்லாந்து, பிரான்ஸ், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட 16 நாடுகளுக்கு பரவியுள்ளது. இந்தநிலையில், வைரஸ் தொற்றிலிருந்து மீள்வதற்கான மருந்துகள் எதுவும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)



# 300 இருக்கை விமானத்தை சீனாவுக்கு அனுப்புகிறது நியூஸி.

நியூயோர்க், ஜன.31

நியூசிலாந்து தனது நாட்டு குடிமக்களை சீனாவில் உள்ள வுஹானில் இருந்து தங்கள் நாட்டுக்கு அழைத்து வர 300 இருக்கைகள் கொண்ட விமான மொன்றை அனுப்பவுள்ளது.

வுஹானில் நியூசிலாந்தை சேர்ந்தவர்கள் 53 பேர் உள்ளனர் என்று கிடைத்த தகவலின்படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சீனாவில் தங்கியிருக்கும் நியூசிலாந்து நாட்டவர்களின் சரியான எண்ணிக்கை கிடைக்கபெறாத நிலையில் அங்கு மேலும் தனது நாட்டவர்கள் பலர் இருக்கக் கூடுமென சந்தேகிப்பதாக நியூசிலாந்து அரசு தெரிவித்துள்ளது.

நியூசிலாந்தில் இருந்து அனுப்பப்படும் விமானத்தில் வுஹானில் உள்ள ஆஸ்திரேலியருக்கும் தனது விமானத்தில் இடம்கொடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக நியூசிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் வின்ஸ்டன் பீட்டர்ஸ் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு விமானத்தை அனுப்புவதற்கான நடவடிக்கைகளை துரிதப் படுத்தப்பட்டுள்ளது என்றும் வுஹானில் இருந்து புறப்படும் தன் நாட்டவர்களை முழு பரிசோதனை செய்வதோடு, அவர்களை தனிமைப்படுத்தி சுகாதார பரிசோதனை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். அதேவேளை அவர்களின்விமான சீட்டுக்கான கட்டணம் உள்ளிட்ட சில செலவுகளை அரசு பொறுப்பேற்கும் என்று அவர் இதன் போது தெரிவித்துள்ளார். நியூஸி லாந்தில் கொரோனா வைரஸ் தொடர்பான எவ்வித பதிவுகளும் இதுவரையில் கிடைக் கப்பெறாத நிலையில், ஒக்லாந்து வைத்தியசாலையில் மாணவர் ஒருவர் குறித்த நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற சந்தேகத்தில் அவர் தனிமைப்படுத்தப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# தனிமைப்படுத்துவதால் கொரோனா அடங்காது!

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை

பீஜிங், ஜன.31

சீனாவிலிருந்து பரவி வரும் கொரோனா வைரஸ் தாக்கத்தால் அதிக அபாயத்தை எதிர்கொண்ட வெளிநாட்டுப் பிராந்தியமாக பாங்கொக் விளங்குகின்றது என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

பாங்கொக்குக்கு சீனாவிலிருந்து அதிகளவு மக்கள் பயணம் செய்வது வழமையாகவுள்ள நிலையில் அந்த நகரில் வைரஸ் மிக வேகமாகப் பரவும் அபாயம் உள்ளதாகப் பிரித்தானிய சவுதாம்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தாய்லாந்துக்கு அடுத்து கொரோனா வைரஸ் தொற்றால் ஆபத்தை எதிர்கொண்ட இரண்டாவது நாடாக ஜப்பான் விளங்குகிறது. அதற்கு அடுத்து வைரஸ் தொற்று பரவும் அபாயம் மிக்க நாடுகள் வரிசையில் முறையே ஹொங்கொங், தாய்வான், தென் கொரியா, அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், வியட்நாம், ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, கம்போடியா, மக்காவு, பிலிப்பைன்ஸ், ஜேர்மனி, கனடா, பிரித்தானியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இத்தாலி, ரஷ்யா ஆகியன உள்ளன என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

சீனாவில் வைரஸ் பரவி வரும் பிராந்தியங்களிலிருந்து புது வருடதினத்தைக் கொண்டாடுவதற்காக பெருமளவு மக்கள் சுற்றுப் பயணங்களை ஏற்கனவே மேற்கொண்ட நிலையில் அந்த மக்கள் நகர்வைப் புரிந்து கொள்ளாது பிராந்திய நகரங்களை எதிர்பாராத வகையில் திடீரென தனிமைப்படுத்துவது காலங் கடந்த செயற்பாடு எனவும் அதனால் உரிய பயனைப் பெற முடியாது எனவும் அவர் தெரிவித்தார். கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்த ஆரம்ப கால கட்டத்தில் கட்டுப்பாடுகள் எதுவும் விதிக்கப்படாத நிலையில் 5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பயணங்களை மேற்கொண்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார். இந்த வைரஸ் பரவலானது ஆகக் குறைந்தது 6 மாத காலத்துக்கு நீடித்திருக்கும் எனவும் அதனால் மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்படவுள்ளனர் எனவும் கனேடிய ரொறண்டோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானியான பேராசிரியர் டேவிட் பிஸ்மான் தெரிவித்துள்ளார். (எ)


## மரண அறிவித்தல்



### திலகவதி சிவஞானசுந்தரம்

சாவகச்சேரி டச்சு வீதி, மருதடியைப் பிறப்பிடமாகவும், அமெரிக்கா, மிச்சிகனை வதிவிடமாகவும் கொண்ட திலகவதி சிவஞானசுந்தரம் 26.01.2020 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முகாந்தரம் முத்துக்குமாரு - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் (முன்னாள் புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், உமாதேவா, ஸ்ரீகாந்தா, சிவகுமார், சிவசக்தி, நந்தபாலன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, கனகலிங்கம் மற்றும் சண்முகதாஸ், புனிதவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.02.2020 ஞாயிற்றுக்கிழமை மிச்சிகன் அமெரிக்காவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

364, டச்சு வீதி,
சாவகச்சேரி.
(CS.30917) (13.17)

தகவல்:
புனிதவதி
(சகோதரி +94771623711)

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 01 . 1974

மறைவு 29 . 01 . 2020

### திருமதி இராஜலட்சுமி விஜயரட்ணம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலட்சுமி விஜயரட்ணம் 29.01.2020 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புவிராஜசிங்கம் மற்றும் பரமரட்ணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், விஜயரட்ணத்தின் அன்பு மனைவியும் றஜனி (யாழ். பிரதேச செயலகம்), உதயச்செல்வன், பிரதீபன் (டொமினிக் குடியரசு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விதுர்ஷன் (யா/இந்துக்கல்லூரி - கணிதப் பிரிவு - 2020) விதுர்ஷா (யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், அதுர்ஷனின் அன்புப் பெரியம்மாவும், பிரநீதா, சருநீதா, அரிகரன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை - கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
(cs 30921) (13.17)

## கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி மல்லாகம் பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கப்பணியாளர் செல்வி ஈ.கோபிகா அவர்களின் அன்புத் தந்தை

### செல்லத்துரை ஈஸ்வரன்

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்,
ஊழியர் நலன்புரிச்சங்கம்.
(CS/30915)(11.17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் வசித்துவந்தவரும் மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவருமான

அமரர்
### நல்லதம்பி கனகலிங்கம்

விண்ணில் 05.04.1946
மண்ணில் 01.01.2020

கடந்த 01.01.2020 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும் இன்று (31.01.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மீசாலை கிழக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.31
யாழ். கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ,பி,சி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவற்குழி அன்னை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் முதலாம் சுற்று ஆட்டங்கள் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இதில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடிசிந்து விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை இளங்கதிர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கைதடி பைஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



## கைக்கொடி மாட்டுச் சவாரி

யாழ்ப்பாணம்,ஜன.31
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் 103ஆவது பிறந்த தின நிகழ்வை முன்னிட்டு பண்டத்தரிப்பு எம்.ஜி.ஆர் முன்னேற்ற கழகத்தினால் நடத்தப்பட்ட கைகொடி மாட்டுச் சவாரி பிற்பகல் 2 மணிக்கு சில்லாலை கலட்டி பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் எம் பிரிவில் சிவகுமார் முதலாம் இடத்தையும்; வசந்தன் இரண்டாம் இடத்தையும், சிவா மூன்றாம் இடத்தையும், ஜி பிரிவில் வசந்தன் முதலாம் இடத்தையும், பிரதீபன் இரண்டாம் இடத்தையும், வசந்தன் மூன்றாம் இடத்தையும், ஆர்.பிரிவில் சின்னராசா முதலாம் இடத்தையும், கிருஸ்ணா இரண்டாம் இடத்தையும், செல்வகுமார் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். (23)

# மகுடம் சூடியது சாலை அணி

யாழ்ப்பாணம்,ஜன.31
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் சாலை விளையாட்டுக்கழக அணி தங்கப் பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புலோப்பளை கிழக்கு அதிசயம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் புலோப்பளை கிழக்கு அதிசயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாலை விளையாட்டுக் கழக அணி மோதியது.

இரு அணிகளும் ஆட்ட நேரமுடிவில் எந்தவித கோலையும் பதிவு செய்யாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் சாலை விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)




## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.31
யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் முதலாம் சுற்று ஆட்டங்கள் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக அணிக்கும், சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக அணி 7:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

சங்கானை இளங்கதிர் விளையாட்டுக்கழக அணிக்கும், மயிலிட்டி வானவில் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சங்கானை இளங்கதிர் விளையாட்டுக்கழக அணி 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. உடுவில் ஆலடிசிந்து விளையாட்டுக்கழக அணிக்கும், பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா 5 புள்ளிகளைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக்கழக அணிக்கும், சண்டிலிப்பாய் ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக்கழக அணி 21:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

# இல்ல மெய்வன்மைப் போட்டி முடிவுகள்



கொடிகாமம், ஜன.31
கச்சாய் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மை திறனாய்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (159)

★ ★ ★

பளை, ஜன.31
பளை மத்திய கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நேற்றுமுன்தினம் கல்லூரி மைதானத்தில் அதிபர் க. உதயகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் இளங்கோ இல்லம் 426 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், வள்ளுவர் இல்லம் 424 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், கம்பன் இல்லம் 400 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் கைப்பற்றின.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பளை பிரதேச செயலர் திருமதி ஜெயராணி பரமோதயன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.காந்தச்செல்வன், மதிப்புறு விருந்தினர்களாக திருநெல்வேலி யாழ். வைத்தியசாலை உரிமையாளர் குலேந்திரராஜா, பளை பொலிஸ் நிலைய உப பரிசோதகர், ஓய்வுநிலை அதிபர் க.குணபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (9)

★ ★ ★

வவுனியா,ஜன.31
வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் கனகரட்ணம் மைதானத்தில் கல்லூரி அதிபர் பா.கமலேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வவுனியா மக்கள் வங்கி முகாமையாளர் பாரதரமணா கலந்து கொண்டார்.

போட்டியில் கலைமகள் இல்லம் முதலாம் இடத்தையும், மலைமகள், அலைமகள், தலைமகள் இல்லங்கள் முறையே ஏனைய இடங்களைப் பெற்றன. (222)



## வீதியோட்ட நிகழ்வு



காரைநகர், ஜன.31

காரைநகர் இந்துக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு ஆண், பெண்களுக்கான வீதியோட்ட நிகழ்வானது கடந்த வியாழக்கிழமை காலை 6 மணிக்கு கல்லூரியின் அதிபர் திருஅரியரட்ணம் ஜெகதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் பங்குபற்றிய போட்டியாளர்கள் பாடசாலைக்கு முன்பாக ஆரம்பித்து காரைநகர் பிரதான வீதியூடாக மீண்டும் பாடசாலை முன்றிலை வந்தடைந்தனர். பெண்கள் பிரிவில் பங்குபற்றிய போட்டியாளர்கள் துறைமுகம் சந்தியிலிருந்து ஆரம்பித்து கிழக்கு பிரதான வீதியூடாக பாடசாலை முன்றிலை வந்தடைந்தனர்.

ஆண்கள் பிரிவில் முதலாமிடைத்தை கு. கஜேந்திரகுமார், இரண்டாமிடத்தை செல்வன் சு. சுதர்சன், மூன்றாமிடத்தை ந. குகப்பிரியந்தன், நான்காமித்தை கி. ஜனிஸ்டன், ஐந்தாமிடத்தை ஆ. ஐங்கரன் ஆகியோரும், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை சு. சரண்யா, இரண்டாமிடத்தை ச. சஞ்சிகா, மூன்றாமிடத்தை ப. விஜிதா, நான்காமிடத்தை ச. அசந்தா, ஐந்தாமிடத்தை சி. லுயானா ஆகியோர் பெற்றனர். (250)



கடற்கரை கரப்பந்தாட்டடத்தில்

# தங்கம் வென்றது அதிசயம் வி.க.

யாழ்ப்பாணம்,ஜன.31

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில் புலோப்பளை கிழக்கு அதிசயம் விளையாட்டுக்கழக அணி தங்கப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புலோப்பளை கிழக்கு அதிசயம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் புலோப்பளை கிழக்கு அதிசயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதிய இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் புலோப்பளை கிழக்கு அதிசயம் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது. (23)

## கபடிப் போட்டி

கரணவாய், ஜன.31

பருத்தித்துறை சுப்பர்மடம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகத்தினால் இலங்கை ரீதியான கபடிச் சுற்றுப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14,15,16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் விளையாட்டுக் கழக நிர்வாகத்தினரைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர். (108)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ்.கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மகிந்தனின் ஆதரவில் நடத்தப்படும் அணிக்கு 11வீரர்கள் பங்குபற்றும் 2020 ஆம் ஆண்டுக்கான மகிந்தன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டச் சுற்றுத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்கு பற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தங்களது பதிவுகளை யாழ்.கால்பந்தாட்ட லீக்கின் போட்டிக்குழு செயலரிடம் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (23)

# ஆர்ச்சர் விலகல்

இங்கிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜோப்ரா ஆர்ச்சர் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ரி-20 தொடரில் இருந்து விலகல்.

இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 3:1 எனக் கைப்பற்றிய நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இடம்பெறவுள்ளது. இந்தத் தொடர் பெப்ரவரி 4ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அதன்பின்னர் 12ஆம் திகதி 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் இடம்பெறும்.

ரி-20 தொடருக்கான இங்கிலாந்து அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. முதல் டெஸ்ட் போட்டிக்குப் பின்னர் ஜோப்ரா ஆர்ச்சருக்கு முழங்கையில் காயம் ஏற்பட்டதால் அவர் இறுதி 3 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவில்லை.

இந்த நிலையில் காயம் குணமடையாததால் அவர் ரி-20 தொடரில் இருந்தும் விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக சகிப் மெஹ்மூத் சேர்க்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




## ஸ்டுவேர்ட் பிராட்டுக்கு அபராதம்



ஜோகனஸ்பேர்க்கில் டு பிளாசிஸ் உடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவேர்ட் பிராட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இறுதி டெஸ்ட் போட்டி ஜோகனஸ்பேர்க்கில் நடைபெற்றது. இந்தப் போட்டியின் நேற்று முன்தின ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வீரர் டு பிளாசிஸ் ஆட்டமிழந்து செல்லும்போது அவருடன் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவேர்ட் பிராட் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதனால் அவருக்கு போட்டியில் ஊதியத்திலிருந்து 15 சதவீத அபராதத்துடன், சஸ்பெண்டுக்கான ஒரு புள்ளியும் வழங்கப்பட்டது. இந்தத் தொடரில் பிலாண்டர், ரோஸ் பட்லர், பென் ஸ்டோக்ஸ், ரபாடா ஆகியோருக்கு ஏற்கனவே அபராதம் விதிக்கப்பட்டு குறிப்பிடத்தக்கது.

# திருப்பி அடிக்கும் முனைப்பில் சிம்பாப்வே அணி !



சிம்பாப்வே அணி நேற்றைய நாள் முடிவில் 7 விக்கெட்டை இழந்து 241 ரன்களைப் பெற்று 354 ரன்களுடன் 3 விக்கெட் கைவமிருக்க முன்னிலையில் உள்ளனர். சிம்பாப்வே அணிக்கு வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இலங்கை அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

நாயணச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டையும் இழந்து 406 ரன்களைக் குவித்தது. பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இலங்கை அணி 293 ரன்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. அணி சார்பில் மத்தியூஸ் 64 ரன்களையும், கருணாரத்னே 44 ரன்களையும், பெர்னாண்டோ 44 ரன்களையும், தனஞ்செய 42 ரன்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சிகண்டர் ராசா 7 இலக்குகளைச் சரித்தார்.



பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய சிம்பாப்வே அணி நேற்றுமுந்தின நாள் முடிவில் 62 ரன்களுக்கு ஓர் விக்கெட்டை இழந்தது. மசுவர் 22 ரன்னுடனும், சாகபாவ் 14 ரன்னுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர். இருவரும் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். மசுவர் 35 ரன்களைப் பெற்ற போது ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் களறமிறங்கிய ரெயிலர் சிறப்பானதொரு ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். அவர் 67 ரன்கள் பெற்ற போது எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். அணி நேற்றைய நாள் முடிவில் 7 விக்கெட்டை இழந்து 241 ரன்களைப் பெற்றது. அணித் தலைவர் வில்லியம்சன் 47 ரன்களுடனும், ரிபானோ ஓர் ரன்னுடனும் களத்திலுள்ளனர்.

# சங்ககரா தலைமையில் பாக். செல்லும் எம்.சி.சி

சங்ககரா தலைவராக இருக்கும் இங்கிலாந்தின் புகழ்பெற்ற மெரில்போன் கிரிக்கெட் கிளப் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ரி-20 போட்டிகளில் விளையாடவுள்ளது.



பாகிஸ்தானில் நடத்தப்பட்டு வரும் பாகிஸ்தான் சூப்பர் லீக்கில் விளையாடும் லாகூர் குவாலண்டர்ஸ், முல்தான் சுல்தான்ஸ் அணிகளுக்கு எதிராக தலா ஒவ்வொரு போட்டிகளில் விளையாடுகிறது. மேலும், பாகிஸ்தான் உள்ளூர் ரி-20 தொடரில் சம்பியன் பட்டம் வென்ற நார்தர்ன் அணிக்கு எதிராகவும் ஒரு போட்டியிலும் விளையாடவுள்ளது.

இதற்கான எம்சிசி அணிக்கு குமார் சங்ககரா கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் எம்சிசியின் தலைவராக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
கணக்காளர்சேவை (SLAcS)
சனி (1/2), ஞாயிறு (2/2)
செவ் (4/2), சனி (8/2),
ஞாயிறு (9/2)
9.00am - 4.00pm
பதிவாளர் சேவை
பிரிவு-01 பிரதி சனி
9.00am - 3.00pm
பிரிவு-02 ஞாயிறு
9.00am - 3.00pm
சகல பரீட்சைக்கான IQ&GK
சனி, ஞாயிறு
9.00am - 1.00pm
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100m தூரத்தில்

முன்னணி பெறுபேறுகளை கொண்ட ஒரேயொரு நிறுவனம்
NEC
ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
A/L 2022, DAY CLASS
புதிய பிரிவுகள் ஆரம்பம்
கலை, வர்த்தகம்
ஆரம்பம்: 01.02.2020
(சனி காலை 8 மணி)
T.P:0774696695,0765350999

சிவப்பு மணல் விற்பனைக்குண்டு
பள்ள நிலங்கள் சீர்செய்வதற்கும் கட்டட அத்திபாரங்கள் நிரப்புவதற்கும் ஏற்ற மிகச் சிறந்த சிவப்பு நிற மணல்மண் எம்மிடம் விற்பனைக்குண்டு. பளைப்பகுதி தொடக்கம் ஊர்காவற்றுறை, காரைநகர் மற்றும் யாழ் மாவட்டம் எப்பகுதியிலும் டிப்பர் மூலம் தங்கள் பகுதிக்கு நேரடியாக கொண்டுவந்து எம்மால் இறக்கமுடியும். தொடர்புகளுக்கு:-
077 649 1027, 077 940 0963

# சூப்பர் ஓவர் எங்களுக்கு சரியாக அமைவதே இல்லை

## வில்லியம்சன் கவலை

50 ஓவர் உலக கோப்பை சூப்பர் ஓவரில் வெற்றி பெற முடியாத நிலையில், தற்போது இந்தியாவுக்கு எதிராகவும் தோல்வியடைந்ததால் கேன் வில்லியம்சன் விரக்தி அடைந்துள்ளார்.

நியூசிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையிலான 3ஆவது ரி-20 கிரிக்கெட் போட்டி ஹாமில்டனில் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டம் சமநிலையில் முடிந்ததால் 'சூப்பர் ஓவர்' முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் ரோகித் சர்மா இறுதி இரண்டு பந்துகளையும் சிக்சருக்கு தூக்க நியூசிலாந்து தோல்வியை தழுவியது.

இங்கிலாந்தில் நடைபெற்ற 50 ஓவர் உலக கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து எதிராக நியூசிலாந்து விளையாடிய ஆட்டம் சமநிலையில் முடிந்தது. அப்போது 'சூப்பர் ஓவர்' முறை கடைப்பிடிக்கப்பட்டது. அதுவும் சமநிலையில் முடிந்தது. இதனால் பவுண்டரி அடிப்படையில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

சூப்பர் ஓவர் கைகொடுக்காததால் உலக கோப்பையை இழந்த நியூசிலாந்து, தற்போது இந்தியாவுக்கு எதிராக முதன்முறையாக சொந்த மண்ணில் ரி-20 தொடரையும் இழந்துள்ளது.

இந்த நிலையில் சூப்பர் ஓவர்கள் எங்களுக்கு சாதகமாக அமையவில்லை என்று அணித் தலைவர் கேன் வில்லியம்சன் கவலை வெளியிட்டுள்ளார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

சூப்பர் ஓவர்கள் எங்களுக்கு சிறப்பானதாக அமையவில்லை. இதனால் வழக்கமான நேரத்தில் போட்டியை முடிக்க முயற்சி செய்வது அவசியம். அனைத்துத் துறையிலும் சிறப்பாக செயற்பட்டோம்.

இந்திய அணி அபாரமான தொடக்கத்தை பெற்றபின், சிறப்பாக பந்து வீசி அவர்களை கட்டுப்படுத்தினோம். இவ்வளவு முயற்சி செய்து விளிம்பில் வந்து தோல்வியை சந்தித்தது ஏமாற்றம் அளிக்கிறது. ஆனால் இந்தப் போட்டியில் சிறு இடைவெளியில்தான் தோல்வியை சந்தித்தோம். கடைசி மூன்று பந்துகளில், இந்தியாவின் அனுபவத்தை நாங்கள் பார்த்தோம்-என்றார்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.